19

# ஜனோபகாரி.

# (JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. } பிங்களஷு மாசிமீ, FEBRUARY 1918. { சஞ்சிகை 2. No. 2.

## JANOPAKARI.

A high class illustrated Tamil Monthly Review devoted mainly to social, Literary, Educational and Economic topics of interest.

Selections from important speeches and papers on Economic subjects; notes of the month on Economic matters.

Pages for Boys and Ladies: A speciality.

### Rates of Subscription (Post Free.)

| | | Inland. | Foreign. |
|---|---|---|---|
| Per annum | Rs. | 3 0 0 | 4 8 0 |
| Single copy | ,, | 0 5 0 | 0 6 0 |
| Sample copy | ,, | 0 1 0 | 0 2 0 |

### Rates of Advertisement.

| | | | |
|---|---|---|---|
| 1 page | Rs. | 8 0 0 | per month. |
| ½ ,, | ,, | 4 0 0 | ,, |
| ¼ ,, | ,, | 2 0 0 | ,, |

All orders for advertisement must accompany with advance.

**To Contributors**:—Contributions on subjects specified above will be received for publication. The articles should be written in plain colloquial Tamil with ink on one side of the paper only. Accepted articles will be paid for on publication. The copyright and right of translation of the articles paid belongs to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

All letters, contributions and remittances etc should be addressed to the Proprietors:

V. N. SAMA RAO & Co.,

VELLORE, (SOUTH INDIA.)

## ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்து வரும் ஓர் சிறந்த சித்திரப்படங்கள் அடங்கிய தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இதில் கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூட்டுறவு ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்களும், ஜனசமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்களும், சிறந்த நீதிகளைப் போதிக்கவல்ல நாவல்களும் நாடகங்களும், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்களும், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்களும், ஸ்திரீகளுக்கும், சிறுவர்களுக்கும் உபயோகமான பல விஷயங்களும் சிறந்த கற்றறிந்தவர்களால் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டு வருகின்றன.

### தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | ரூபா | 3—0—0 | 4—8—0 |
| தனிப்பிரதி | ,, | 0—5—0 | 0—6—0 |
| மாதிரிகாபி | ,, | 0—1—0 | 0—2—0 |

### விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1-பக்கத்திற்கு மாதம் | 1-க்கு | ரூபா | 8—0—0 |
| ½ ,, | ,, | ,, | 4—0—0 |
| ¼ ,, | ,, | ,, | 2—0—0 |

வியாசமெழுதுவோர் கவனிக்கவேண்டியவை:—வியாசம் எழுதுபவர்கள் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி எழுதலாம். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் அரைப்பாதியில் எழுதி யிருத்தல்வேண்டும். கடினமான தமிழ் உதவாது. வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரசுரமானதும் எழுதியவர்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். சம்பாவனை செய்திருக்கும் வியாசங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வியாசங்களைத் திரும்பவேண்டுவோர், தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாக்கடிதங்களும், சந்தாப்பணம் முதலானவைகளும்கீழ்க்கண்டவிலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

இராயவேலூர், (தென்னிந்தியா.)

## How to Teach young Children?

BY MR. N. R. KEDARI RAO M.A., L.T.

## சிறுவர்களுக்குக் கல்வி போதிப்பதெப்படி?

'சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பது வெகு சுலபமானது' என்று பலரும் எண்ணியிருத்தல் கூடும். யோசித்துப்பார்க்கின், அது அப்படியன்று. பெரிய வகுப்புக்ளுக்குச் சொல்லிக் கொடுப்பதைக்காட்டிலும், சிறிய வகுப்புக்களுக்குச் சொல்லிக்கொடுப்பதே சிரமமானது என்று தெரியவரும்; ஏனெனில், நாம் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசுகிறோமோ அந்த விஷயம் மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தால், அதை நாம் எப்படிச்சொன்னாலும் பெரிய பிள்ளைகளுக்கு அர்த்தமாய்விடும். அதேவிஷயத்தைச் சிறுவர்களுக்குக்கூடத் தெரியும்படி சொல்லுவதற்கு மிகுந்த சாதுரியம் வேண்டும். உதாரணமாக: குழந்தைகட்குக் க்சப்புமருந்து என்றால் பிடிக்காது. ஆனால், அதைச் சர்க்கரையில் கலந்து கொடுத்தால் சுலபமாய்ச் சாப்பிட்டுவிடும். அதே மாதிரியாக, கடினமான கல்வியையும் உருசியுண்டாகும்படி கற்பித்தால், குழந்தைகள் சுலபமாய் அவற்றை ஏற்கும். எந்த உபாயங்களினால் கல்வியை உருசியுண்டாகும்படி செய்யலாம் என்று யோசிப்போம்.

முதன்முதலில் கல்வி என்றால் என்ன? முற்காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது, கணிதம், தத்வசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், வியாகரணசாஸ்திரம் முதலியவைகளை கல்வி என்று நினைத்திருந்தார்கள். இப்பொழுதோ, ஊர் நடவடிக்கை முதற்கொண்டு இயற்கை யற்புதங்கள், சித்திரம்வரைதல், பூகோள சாஸ்திரம், நம் தேச சரித்திரம், வியாபார விஷயத்தில் பேரேடு முதலிய கணக்குக்களை ஸரிவர வைத்துக்கொள்ளும் விதம், தச்சு வேலை, கொல்லத்துவேலை முதலிய தொழில்கள்—இவையெல்லாம் கல்வி யென்றே பெயர் பெற்றிருக்கின்றன. தவிரவும், முன்னாளில் 'அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்னும் வாக்கியத்தையே உபாத்தியாயர்கள் எப்போதும் அனுஷ்டித்து வந்தார்கள். அதன் பயன் என்னவென்றால், குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் போவதென்றால் தலைவலி வந்துவிடும். உபாத்தியாயரைக்கண்டால், உடம்பெல்லாம் நடு நடுங்கும். தற்காலத்திலோ பிரம்பை ஒரு உபாத்தியாயரும் உபயோகிக்கிறதில்லை; குழந்தைகளை அடிக்கிறதில்லை. அவர்களைப் பக்ஷமாகப் பாராட்டியே கல்வி கற்பிக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். மூன்றாவது, முற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் உலக-விஷயங்களைப்பற்றி ஒன்றுமே சொல்லிக்கொடுப்பதில்லை. இப்பொழுதோ, ரெயில்வே, தபால், தந்தி, முனிஸிபாலிடி முதலிய உலகவிசார ஸம்பந்தமான பல விஷயங்களையும் சொல்லிக்கொடுக்கிறார்கள். நான்காவது பண்டைக்காலத்தில் ஒரு பையனுடைய புத்தி சாலித்தனத்தையே அதிகரிக்கவேண்டுமென்று கருதியிருந்தார்களே தவிர, அவனுடைய தேகஸ்திதியைப்பற்றிக் கொஞ்சமும் கவனிக்கவேயில்லை. இப்பொழுதோ, ஒருவனுக்கு உடம்பில் திறமையிருந்தால்தான் அவன் மனம் நன்றாய் வேலை செய்யும் என்பதைத் தெரிந்துகொண்டு, தேகாரோக்கியத்துக்கு வேண்டிய விளையாட்டுக்களையும், டிரில் ஜிம்னாஸ்டிக்ஸ் முதலிய விஷயங்களையும் புதிதாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

முற்கால நிலைமைக்கும் தற்கால நிலைமைக்கும் இவ்வளவு வித்தியாசம் ஏன் இருக்கிறது என்பதை ஒருவர் ஆராய்ந்தால், அவருக்குப் பல நுட்பமான சங்கதிகள் தெரியவரும். முன்னாளில் ஒரு உபாத்தியாயர் தான் எந்தப் பாடத்தைச் சொல்லிக்கொடுக்கிறாரோ அதில் மாத்திரம் நிபுணரோ யொழிய, குழந்தைகளின் இயற்கை என்ன? எவ்விதமாய்ச் சொல்லிக் கொடுத்தால் அவர்களுக்கு நன்றாய்த் தெரிய வரும்? என்பனவற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இப்பொழுதோ, குழந்தைகளின்

குணநிசயங்களைப் பற்றி ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தெரிந்திருப்பது அவசியம் என்று ஏற்படுத்திவிட்டார்கள்.

அவ்வண்ணம் நோக்கின், குழந்தைகளுக்கு ஆறுவது வயதளவும் மூளை குறைச்சலாயிருக்கிறது என்று தெரியவருகிறது; ஆகையால், ஞாபகசக்தியும் குறைவே. ஏதாவது ஒரு சப்தம் உண்டானால், சப்தம் உண்டாயிருக்கிறது என்று தெரியுமே தவிர, அது எங்கிருந்து உண்டாகிறது, எதனால் உண்டாகிறது என்ற விவரம் அவற்றிற்குத் தெரியாது; இந்த விஷயம் சம்பாவிதம் என்றும், இந்த விஷயம் அசம்பாவிதம் என்றும் தெரியாது; நாம் என்ன செய்கிறோமோ அப்படியே நம்மைப்பார்த்துச்செய்யுமே தவிர, தானாக ஒன்றும் செய்யத்தோன்றாது. ஆறு வயது முதல் எட்டு வயது வரையில் தேகம் பருத்து வளரும்; ஆகலின், புத்தி அதிகமாக இடமில்லை. எட்டு வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலோ புத்தியானது வெகு சீக்கிரமாக வளரும்; தேகத்தில் களைப்பே தோன்றாது. நன்னடக்கைகளைப்போதிப்பதற்கு இதுவே உயர்ந்த காலம்; ஞாபகசக்தியும் அதிகம். ஆகையால்தான் எந்தப்பாடத்தையும் மெட்டுருப்போடுவது சுலபமாயிருக்கும். இளமெழுகில் பிரதி எப்படி அமையுமோ அப்படியே மனதில் எவ்விஷயமும் நன்றாய்ப் பதியும். பெரியோரைப் பேணுதல், சுறுசுறுப்பு, உண்மை பேசுதல் முதலிய நற்குணங்களையெல்லாம் இப்போது சொல்லிக்கொடுத்தால்தான் வாழ்நாள் முழுதும் நன்கு அமைந்திருக்கும். 'விளையும்பயிர் முளையிலே' என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? இவ்விஷயங்களையெல்லாம் இப்போது கற்பிக்காவிட்டால், பிற்பாடு அவர்கள் கற்பது மிகவும் கஷ்டமாயிருக்கும்.

பன்னிரண்டு வயது முதல் பதினைந்து வயது வரையில் தேகவளர்ச்சி ஜாஸ்தியாயும், புத்திக்ஷணியம் கொஞ்சம் குறைச்சலாயும் இருக்கும். மறுபடியும், பதினைந்து வயது முதல் பதினெட்டு வயது வரையிலும் புத்தியானது வெகு தீவிரமாய் வளரும். பையன்களுக்கே கல்வியில் உருசி தோன்றும் காலம் இதுவே. விளையாட்டு விஷயங்கள் நீங்கி, ஒரு காரியத்தின் முன்பின் விஷயங்களை ஆலோசிக்கும் திறமையும் இப்பொழுதுதான் உண்டாகும். 'நாமும் கல்வியிற் தேர்ந்தவராய், யாவரும் புகழும்படி சற்காரியங்களைச் செய்யவேண்டும்' என்ற அவா இப்பொழுதுதான் அவர்களுக்குத்தோன்றும். அவர்களுக்கு நாம் 'இப்படிச்செய்வது உத்தமம்' என்று சொல்லலாமே தவிர, 'இப்படித்தான் செய்யவேண்டும்' என்று கட்டாயப்படுத்தக்கூடாது. அப்படிச்செய்தால், பிள்ளைகள் வணங்காமுடியாய்விடுவார்கள். அவர்களுக்கு மனம் ஒரு நிமிஷ நேரமும் சும்மா இராது; 'துருதுரு' என்று தத்தளித்துக்கொண்டேயிருக்கும். ஆதலின், இவ்வயதில் துன்மார்க்கர்களோடு பையன்களைச் சகவாசஞ்செய்ய விடவே கூடாது; சத்சங்கம் இன்றியமையாதது; மனதின் துருதுருப்பை நல்ல வழியில் செலுத்தினால்தான் நன்மையுண்டாகும். வகுப்பில் சட்டாம்பிள்ளை வேலையைக்கொடுத்தல், சிறுவர்கள் விளையாடுவதை மேற்பார்வை பார்த்தல் முதலிய சிறுவேலைகளை அவர்களுக்குக் கொடுத்து மனத்துருதுருப்பை உபயோகிக்கச் செய்வது மிகவும் உசிதமாகும்.

மேற்கூறியவைகளினின்று, சிறு பிள்ளைகளின் குணம் பெரியபிள்ளைகளின் குணம் இவ்விரண்டிற்கும் பலவித வேறுபாடுகள் இருக்கின்றனவென்று விளங்குகின்றதன்றோ? ஆகலின், பெரியவர்களுக்குக் கல்விகற்பிக்கும் விதமாகவே சிறுவர்க்கும் கல்வி கற்பித்தல் பெரிய பிசகாகும். ஆயினும், இந்த விஷயம் வெகுபேருக்குப் பலநாள்வரையில் தெரியாமலிருந்தது. இப்போது நூறு நூற்றிருபது வருஷங்களாகத்தான் இவ்விஷயத்தைப்பற்றிப் பலரும் சிரத்தையோடு யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஜெர்மனியில் 'பிரோபல்' என்ன (Froebel), பிரான்ஸில் 'ரூஸோ' என்ன (Rousseau) இத்தாலியாவில் 'மாண்டிஸோரி' (Madame Montessori) என்ன இவர்களெல்லோரும் இதை ஆராய்ச்சி செய்து அரிய பல நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

அவர்கள் சொல்லும் விஷயங்கள் எல்லாவற்றையும் நாம் கிரகிக்காவிடினும், நமது தேச கால வர்த்தமானங்களுக்கு உரியவை எவை என்பதை மட்டும் ஆராய்ந்து அறிதலே மேன்மை.

## FROEBEL.
## 'பிரோபல்'

"பாலர்க்குப்—பாலனும்,
நேயர்க்கு—நேசனும்,
கற்றோர்க்குக்—கல்வியாம்,
நல்லோர்க்கு—நலனேயாம்,
என்னீசனே! பரமேசனே!"

'பிரோபல்' என்பவரின் முழுப்பெயரானது 'ப்ரெடரிக் வில்ஹெல்ம் அகஸ்டு பிரோபல்' என்பதே. (Friedrick Wilhelm August Froebel) இவர் 1782-ம் வருஷம் ஏப்ரில் மாதம் 21-ம் தேதி ஜனனமானர். இவர் பிறந்து ஒரு வருஷத்துக்குள்ளேயே இவரது தாயார் தேக வியோகமானபடியாலும், தகப்பனர் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டபடியாலும், இவரைப் பாதுகாப்பதற்குத் தகுந்த மனிதர் ஒருவருமில்லாமல் போய்விட்டார்கள். இவர் பதினெட்டு வயதில் பள்ளிக்கூடத்தை விட்டு விட்டு, எழுவருஷகாலமாகப் பல உத்தியோகங்களைப் பார்க்க முயன்ருர். ஒன்றும் சரிப்படாமலிருக்கவே இவர் 'பிராங்க்போர்ட்' (Frankfort) நகரத்தில் ஒரு உபாத்தியாயராக அமர்ந்தார்.

பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் போதெல்லாம், 'கல்வியினாலாய பயனென்கொல்' என்பதைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார். இவருக்குத் தோன்றியதென்னவென்ருல்: "ஒவ்வொருவரிடத்திலும் தெய்விகத்தன்மை கொஞ்சம் இருக்கின்றது; அத் தெய்விகத் தன்மையை வெளியே கொண்டு வருவதுதான் பிறப்பின் பயன்; நம்மைச் சிருஷ்டித்த கர்த்தாவுக்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம்? நமக்கும் இயற்கைப் பொருள்களுக்கும் என்ன ஸம்பந்தம்? ஆகிய இவற்றைக் கற்றுக்கொடுப்பதே கல்வியின் பயன்" என்பதே. இன்னும், இக் கல்வியானது பள்ளிக்கூடத்தில் மாத்திரம் கற்பதன்று; வீட்டில் சற்குணமான பெற்றோர்கள் நல்ல ஞானத்தைக் குழந்தைகளுக்குப் புகட்ட வேண்டும்" என்றும் துணிந்தார். ஒருவனுக்குப் புத்திசாலித்தனம் மாத்திரம் இருந்தால் போதாது; அவனுக்குக் குணம் நல்லதாயிருக்க வேண்டும். இவை இரண்டும் இருந்தாலும் பிரயோஜனமில்லை; அவனுக்கு உடம்பில் வலிமை வேண்டும். இம்மூன்றும் இருந்தால் தான் அவனுக்குக் கல்வி பயன்படும் என்று அவருக்கு நன்கு விளங்கிற்று.

ஆதலின், ஒருவனுக்குத் தேகவலிமை, மனவலிமை, குணவலிமை ஆகிய இம்மூன்றையும் அளிப்பதற்கு உள்ள சாதகங்கள் எவை யென இவர் ஆராய்ச்சிசெய்யத்தொடங்கினர். சாதாரணமாய் இயற்கையில் ஒரு வித்தானது தகுந்த இடத்தில், அதாவது வெளிச்சமும் ஈரமும் போதுமான இடத்தில் விதைக்கப்பட்டால் அது எப்படி நாளுக்குநாள் பெரிதாகிப் பூக்கள் பூத்து காய்த்துப் பலன்கொடுக்கின்றதோ, அதே மாதிரியாக ஒரு சிறு குழந்தையை ஸத்சங்கத்தில் வைத்து காலத்தில் கல்வியைச்கற்பித்தால், அது தேகவலிமை, மனவலிமை, குணவலிமை இம் மூன்றிலும் மேம்பட்டுத் தகுந்தசமயத்தில் தக்க பலனை அடையும் என்று அறிந்தார்.

நம்மைச் சிருஷ்டித்த கடவுளே இயற்கைப் பொருள்களையும் சிருஷ்டித்திருக்கிறாராதலின், அவைகளின் சுபாவம் எப்படியோ அப்படியே நம் சுபாவமும் இருக்கும் என்று ஊகித்தறியலாம். ஆகையால்தான, ஜெர்மெனி தேசத்தில் பெயர்பெற்ற தத்வசாஸ்திரியும் கவிசிரேஷ்டருமான கீடே என்பவர் (Goethe), 'நம்முடைய குழந்தைகள், மனதில் என்ன நினைக்கின்றனவோ அவைகள் நமக்குக் கொஞ்சமும் தெரியாது; அவர்களுடைய சுபாவத்தை அறிவது அரிது; நாம் அதிகமாகச் சிரமப்பட்டால்தான் கொஞ்சமாவது தெரியும்' என்று எழுதியிருக்கிறார். இதை மேற்கோளாகக்கொண்டு குழந்தைகளின் பிறவிக்குணம் எப்படியிருக்கிறதோ அதை ஒட்டித்தான் நாம் அவைகட்குக் கல்வி கற்பிக்க

வேண்டும் என்று பிரோபல் வற்புறுத்துகிறார். அதேதென்னவெனில், குழந்தைகளுக்கு விளையாட்டு என்றால் மிகவும் பிரியம். கதைகேட்பதிலும், மற்றொருவர் பாடுவதை உற்றுக்கவனிப்பதிலும் மிக்க ஸந்தோஷம். ஆகையால், நாம் குழந்தைகளுக்குச் சிறியகதைகள் மூலமாயும், அழகான பாட்டுக்கள் மூலமாயும் விளையாட்டு வழியாயும் கல்வி கற்பிக்கவேண்டும் என்று தெரியவருகிறது. குழந்தைகளைக் கையாலாவது பிரம்பாலாவது அடிக்கவேகூடாது. அவைகள் ஸதாகாலமும் புஸ்தகத்தையே வைத்துக்கொண்டு வாசிக்கவேணும் என்றும் சொல்லக்கூடாது. விளையாடும்போது கவலையற்று மனப்பூர்த்தியாய் விளையாடவேண்டும். அங்குமிங்கும் ஓடித்திரிந்து சிரித்துக்கொண்டு, தம்முடைய ஸமவயதான மற்ற குழந்தைகளோடு விளையாடுவதின் ஸந்தோஷத்தை என்னென்றுரைப்பது! உலகத்தில் பல நூதன விஷயங்களைக் கண்டுபிடித்துக் கொடுத்த மஹான்கள் ஒவ்வொருவருடைய வாழ்நாட்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்தால், அவர்கள் எல்லோரும் குழந்தைப்பருவத்தில் பஹா விஷமக்குழந்தைகளாகத்தான் இருந்திருப்பதாகத் தெரிகிறது. குழந்தைகள் விஷமம் செய்யாமலும், முழுமனதோடு விளையாடாமலும், கையைக் கட்டிக்கொண்டுசும்மா உட்கார்ந்திருப்பதுதான் நன்மை என்று நம்மவர்களில் பலரும் நினைக்கிறார்கள். அது தவறான விஷயமாகும். எவ்வளவுக்கெவ்வளவு குழந்தைகள் சுறுசுறுப்பாய் விளையாடுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு நன்மை என்று தெரியவரும். "பெரியவர்கள் சுறுசுறுப்பாயிருப்பதால் பலவேலைகளைச் செய்துமுடிக்கிறார்கள். குழந்தைகள் விஷமம் செய்தால் அவர்களுக்கும் கெடுதி, பெற்றோர்க்கும் தீமை; ஆதலின், குழந்தைகள் சுறுசுறுப்பாய் ஏன் இருக்கவேண்டும்?" என்று சிலர் கேட்கலாம். குழந்தைப்பருவத்தில் இருக்கும் சுறுசுறுப்புத்தனத்தை நாம் கண்டித்தால், அவர்கள் ஸந்தோஷமற்று, மனக்கவலையும் ஏக்கமும் மேலுற்று, கடைசியில் நடைப்பிணமாவாரே தவிர, ஒருவருக்கும் நன்மையுண்டாகாது. எவனொருவனுக்குக் குழந்தைப்பருவத்தில் ஸந்தோஷமில்லையோ, அவனுக்கு வாழ்நாள் முழுதிலும் ஸந்தோஷமேயில்லை என்பது திண்ணம். அப்படிக் குழந்தைகள் விஷமம் செய்யாமல் இருக்கவேண்டுமென்றால், அவர்களுக்கு இடங்கொடுக்காமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டுமே தவிர, அவர்களை அடிக்கவாவது திட்டவாவது கூடாது. உதாரணமாக:—நெய்க்கிண்ணத்தைக் குழந்தை விளையாடுமிடத்தில் வைத்துவிட்டு அதைக் குழந்தை கொட்டிவிட்டது என்று சொல்வதில் பிரயோஜனமில்லை; குழந்தை கைக்கு எட்டாத இடத்தில் வைப்பதே நன்மை. அதேமாதிரியாக, உயர்ந்த பட்டு ஆடையைக் குழந்தைகளுக்கு உடுத்தி அவையெல்லாம் அழுக்காய்ப் போய்விட்டனவென்று பிறகு செல்வதில் என்ன உபயோகம்? குழந்தைகள் ஆடையை அழுக்காகச்செய்வது இயற்கை என்பதைப் பெற்றோர் அறிந்து, மிகவும் விலையுயர்ந்த ஆடைகளை அவைகளுக்குக் கொடுக்காமலிருப்பதே உசிதம்.

தவிரவும், புத்தி தெரிந்த பிறகு நாம் விளையாடும் விளையாட்டுக்கும் சிறுகுழந்தைகளின் விளையாட்டுக்கும் பல வித்தியாஸங்கள் உள்ளன. முக்கியமாக நாம், வேலைசெய்வதால் உண்டாகும் களைப்பை மாற்றுவதற்காகவே விளையாடுகிறோம். இல்லாவிடில், தேகப் பயிற்சிக்காக விளையாடுகிறோம். குழந்தைகளுக்கோ அப்படியன்று. விளையாடுவதே அவற்றின் இயற்கை. அவ்விளையாட்டை நிறுத்துவதும் நன்மையன்று. குழந்தையின் மனம் போனபடிபோகட்டும் என்று நினைத்து அது செய்வதெல்லாம் சரி என்று நாம் சும்மா பார்த்துக்கொண்டிருப்பதும் நன்மையன்று. அவ்விளையாட்டுப்புத்தியை நல்லவழியில் திருப்பி அதினின்றும் நன்மையை உண்டாக்குவதே உபாத்தியாயரின் முதற் கடமையாகும்.

இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் தீர அறிந்து பிரோபல் என்பவர் 1826-ம் வருஷத்தில் ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட்டார். (The Education of Man) இதற்குப்பின் 1836-ம் வருஷத்தில் அவர் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி அதில் சில குழந்தைகளுக்குக் கல்வி

கற்பிக்கும்போது, தான் எந்த மாதிரி சொல்லிக் கொடுத்தால் நல்லது என்று நினைத்திருந்தாரோ அதேமாதிரி செய்து ஒவ்வொரு குழந்தையின் மேலும் பக்ஷமாயும் பிரியமாயும் இருந்தார். அவர் நூதனமாய் ஸ்தாபித்த பள்ளிக்கூடத்துக்கு 'கிண்டர்கார்டன்' (Kindergarten) என்று பெயரிட்டார். 'கிண்டர்' என்றால் ஜெர்மென் பாஷையில் குழந்தைகள்; 'கார்டன்' என்றால் தோட்டம். ஸாதாரணமாய் ஒரு தோட்டத்தில் செடிகள் எப்படி செழித்து ஓங்கி வளருகின்றனவோ, அப்படியே பள்ளிக்கூடங்களிலும் குழந்தைகள் ஸந்தோஷமாய், கவலையில்லாமல், சுயேச்சையாய், நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளருமிடம் என்று பொருள்படும்படியாய், 'ரோஜாதோட்டம்', 'மல்லிகைத்தோட்டம்', 'முல்லைத்தோட்டம்' என்றபடி 'குழந்தைகளின் தோட்டம்' என்று அவர் பெயர் வைத்தார். அவர் பெயர் வைத்து இன்றைக்குச் சற்றேறக்குறைய நூறு வருஷங்களாயினும், அப்பெயரே செழித்து வருகிறது. அதுவல்லாமலும், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களிலும் குழந்தைகள் கல்வி கற்கும் இடங்களுக்கெல்லாம் 'கிண்டர் கார்டன்' என்ற பெயரே கொடுக்கப்பட்டிருக்கின்றது.

என். ஆர். சேதாரி ராவ்,

---

## Benefits of Co-operation to Agriculturists.

By Mr. P. Chinnasawmy Iyer.

## கூட்டுறவினால் வியவசாயிகளுக்கு உண்டாகும் நன்மைகள்.

சுமார் பத்துவருஷங்களுக்கு முன் சென்னை இராஜதானியில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் மூலைக்கு ஒவ்வொன்றாகச் சிலவே யிருந்தன. இப்பொழுதோ சுமார் 2400 சங்கங்களுக்கு மேலாகவே ஏற்படுத்தப்பட்டு, அவை ஏறக்குறைய ஒரு லட்சம் மெம்பர்களுக்கு உபயோகமாயிருந்து வருவதுடன், ஒரு கோடி ரூபாய் வரையில் லேவாதேவியும் நடந்துவருகின்றது.

முக்கியமாக ஐக்கியச் சங்கங்களை கிராமாந்தரங்களில் ஏற்படுத்திக்கொள்வதன் நோக்கம், பொருளுதவிக்காகத்தான். தங்களுக்கு வேண்டும்போது சகாயவட்டிக்குப் பணம் கடன்வாங்கி வியவசாயத்தை விருத்திசெய்வதும், தக்க காலங்களில் தங்களால் பயிரிடப்பட்ட தானியங்களை நல்லவிலைக்கு விற்று லாபம் சம்பாதித்துக் கொள்வதும் முக்கிய நோக்கங்களாக இருக்கின்றன. மேற்குறித்த நோக்கங்கள் எல்லா ஜில்லாக்களிலும் நன்கு பரவுமானால், இராஜதானியில் பொருள் சம்பந்தமான அபிவிருத்தி நன்கு ஏற்படுமென்பதற்குத் தடையில்லை. உதாரணமாக: வியவசாயிகள் இதுவரை சாவுகாரிகளிடத்தில் வாங்கிய பணத்தின் வட்டிக்கும், இப்போது ஐக்கியநாணயச் சங்கங்களுக்குக் கொடுத்துவரும் வட்டிக்கும் உள்ள வித்தியாசம் வருஷம் 1-க்கு 3-லட்சம் அல்லது 4-லட்சம் என்றால், இன்னும் சில வருஷங்களுக்குப் பின் இந்த 4-லட்சம் ரூபாய் 40-லட்சமாக ஆகிவிடுமென்பதற்குத் தடையில்லை. வட்டியில் லாபம் என்கிற நன்மையானது, கூட்டுறவினால் ஏற்படும் பல நன்மைகளுள் ஒன்று என்று சொல்லலாம். கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தியாக ஆக, ஒருவருக்கும் பிரயோஜனமில்லாமல் புதைக்கப்பட்டும், பானையில் போட்டு மூடிவைக்கப்பட்டதுமான தொகைகள் அநேக டிபாஸிட்டுகளாக மேற்படி சங்கங்களில் சேர்ப்பிக்கப்பட்டு, அநேக வியவசாயிகளை அநியாய வட்டியிலிருந்து மீட்க ஏதுவாயிருக்கும். கடனிலிருந்து மீட்கவும் வியவசாயச் செலவுக்காகவும் வேண்டியதொகை சுவல்பவட்டிக்குக் கிடைத்தால், வியவசாயிகள் தங்கள் வேலைகளை ஊக்கத்தோடும் சந்தோஷத்தோடும் செய்வார்களென்பதில் ஐயமில்லை. கவலையில்லாமலும், நிலத்தைச் சரியாய் உழுது எருப்போட்டு சாகுபடிசெய்வதனாலும் மாசூல் அதிகமாகி வியவசாயிகளின்

பொருளாதார நிலைமை விருத்தியடைகின்றது. கூட்டுறவின் முயற்சியினால் வியாபாரம், நெசவுத்தொழில் முதலியன விருத்தியடைவதைக் காட்டிலும், வியவசாயம் அதிக பலனை அடைவதற்கு மார்க்கங்கள் உள்ளன. முன் கூறியபடி, வியவசாயிகளுக்குப் பணக்குறைவினால் உண்டாகும் கஷ்டங்களை நிவிருத்திசெய்யவும், அவர்களுக்குத் தங்கள் நிலங்களினின்று கிடைக்கும் வரும்படியை அதிகரிக்கச்செய்யவும், அவர்கள் அரைவயிறு கஞ்சி குடித்துப் பட்டினியிராமல் சாப்பாட்டுக்குக் குறைவின்றி ஜீவனம் செய்யவும் ஆகிய இவைகளே கூட்டுறவின் முயற்சியால் பெறப்படும் முக்கிய நன்மைகள்.

சாகுபடியான மாகூலை வியவசாயிகள் அறுவடையானவுடனே சிஸ்திக்காகக் குறைந்த விலைக்கு விற்கநேரிடுகின்றது. இதனால்,ஏற்கெனவே ஏழையான குடியானவன் இன்னும் நஷ்டமடைகிறான். மேலும், தனித்தனியாக ஒவ்வொரு குடியானவனும் தன்னிடத்திலிருக்கும் கொஞ்சம் தானியத்தை அருகிலிருக்கும் வியாபாரஸ்தலத்திற்குக் கொண்டுபோய் விற்பதனால் செலவு அதிகமாவதுடன், பொருளுக்குத்தகுந்த விலையும் கிடைப்பதில்லை. ஒன்றுமறியாத குடியானவன் பட்டணங்களிலுள்ள வியாபாரிகளின் தந்திரங்களுக்கு உட்பட்டுத் தான் கொண்டுபோன 10 கலம் நெல்லை 8 கலமாக அளந்து கொடுத்துவிட்டு வருகிறான். கூட்டுறவுச் சங்கங்களின் உதவியால் இவ்வித கஷ்டங்கள் நிவர்த்தியாகுமென்பது நன்கு ஏற்படுகின்றது. வியவசாயிகள் கிஸ்திகாலத்தில் சங்கத்திலிருந்து வேண்டிய பணத்தை நாலைந்து தவணைக்குக் கடனாகப் பெற்றுக்கொண்டு தமது மாகூலுக்கு நல்ல விலை வரும்போது விற்று லாபமடையலாம். இன்னும், ஒரு கிராமத்தில் உள்ள குடியானவர்கள் பலரும் ஒன்றுசேர்ந்து, மேற்படி சங்கத்தின் மூலமாய் பட்டணங்களுக்கு அவரவர்களுடைய மாகூல்களை ஒன்றுசேர்த்து அனுப்பினால், தனித்தனியாக விற்பதனால் உண்டாகும் நஷ்டங்கள் பலவும் குறைந்து லாபமடைவார்களென்பதற்கு ஐயமில்லை.

வியவசாயிகள், தாங்கள் பாடுபடுவதற்குத்தகுந்த வரும்படி நிலங்களினின்று கிடைப்பதில்லை என்று சொல்வது உண்மைதான். ஏனென்றால், மாடுகளின் தேகவலிமையானது எப்படி போதுமானவளவு தீனியின்மையால் குறைந்துகொண்டு வருமோ, அப்படியேதான் சரியான எருப்போடாமல் பயிரிடப்படும் நிலங்களும் தக்க பலனைக் கொடுப்பதில்லை. குடியானவனுக்குத் தக்க சமயங்களில் நிலங்களுக்குப் போதுமானவளவு எருவு, தழைகள் முதலியன வாங்கிப்போடுவதற்குப் பணம் அகப்படுவதில்லை. அப்படிப் பணம் கிடைக்கினும், அதிக வட்டிக்குத்தான் கிடைக்கும். ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் உள்ள கிராமங்களில் இவ்வித கஷ்டங்கள் நேரிட மார்க்கமில்லை. ஏனெனில், இங்கு வேண்டும்போது வியவசாயச்செலவுக்காகத் தேவையான தொகையை பெற்றுக்கொள்ள சௌகரியமிருக்கின்றது. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாய் ஒரு கிராமத்திலிருக்கும் குடியானவர்கள் அவரவர்களுக்கு வேண்டிய கடலைப்பிண்ணாக்கு, முத்துக்கொட்டைபிண்ணாக்கு முதலான எருக்களை மொத்தமாக வாங்கி தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டால், தனித்தனியாக மேற்படி எருக்களை வாங்குவதனாலுண்டாகும் வண்டிவாடகை, சில்லரையில் வாங்குவதால் ஏற்படும் விலை நஷ்டம் முதலியன குறைந்து அதிக லாபமடைய ஏதுவாகும். வந்தவாசி தாலூக்காவில் ஒரு கிராமத்தில், கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாய் மெம்பர்கள் ஒரே மொத்தமாய் பிண்ணாக்கு வாங்கித் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டார்கள். மாகூல் அறுவடையான பிறகு அவர்கள் கணக்குப்பார்த்ததில், ஒவ்வொருவருக்கும் மேற்படி பிண்ணாக்கினால் கிரயத்தைவிட இரண்டு பங்கு மாகூல் அதிகரித்ததாக ஏற்பட்டது. ஆகையால், கூட்டுறவுச் சங்கங்கள் எருவு முதலியவைகளை மொத்தமாய் தருவித்து மெம்பர்களுக்குக் குறைந்தவிலைக்குக் கொடுத்து உதவிபுரிய சாதனங்களாக இருக்கின்றன. வியவசாய டிபார்ட்மெண்டாரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கலப்பை முதலிய கருவிகளையும், மேற்கூறியபடி மொத்த

மாகத் தருவித்து மெம்பர்கள் குறைந்தவிலைக்கு எடுத்துக்கொள்ளலாம். இவையன்றியும், கூட்டுறவு முயற்சியினால், கவலைக்குத் தேவையான தொண்டம் சால் முதலானவைகளை உள்ளூரிலேயே மொத்தமாகத் தோல்வாங்கிக்கொடுத்து குறைந்த விலையில் கிடைக்கும்படி செய்து கொள்ளலாம். கூட்டுறவின் முயற்சியால் வியவசாயிகள் தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்கள் பலவற்றையும் சுலபமாகச் செய்துகொள்ளலாமென்பது மேற்கூறியவற்றால் ஏற்படுகின்றனவன்றோ?

வியவசாயிகளுக்குக் கூட்டுறவினால் ஏற்படக்கூடிய நன்மை பொருளபிவிருத்திக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டதன்று; பொதுவாக ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்யத்தக்கச் சாதனமாகவும் இருக்கின்றது. எப்போது ஜனங்கள் பொருளாதாய விஷயமாய் ஒரே மனத்துடன் வேலைசெய்கிறார்களோ, அப்போதே கல்வியின் அவசியமும் ஏற்படுகின்றது. படிப்பின்மையே கூட்டுறவு முயற்சிக்கு ஒருபெரிய தடங்கலாகும். கூட்டுறவு முயற்சியே படிப்புக்குத் தூண்டுதலாயிருந்து, படிப்பு அபிவிருத்தியடைய அடைய அது கூட்டுறவு முயற்சியை அபிவிருத்திசெய்கிறது. நான் அறிந்தமட்டில், கையெழுத்துக் கூடப் போடத்தெரியாத அநேக குடியானவர்கள், சங்கங்களில் சேர்ந்த பிறகு எழுதப்படிக்கவும், ரசீது முதலியவைகளைச் சரிவர கணக்குப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவின் நன்மைகள் இவை மாத்திரமன்று: சுலபவட்டிக்குப்பணம்கிடைக்கச் செய்வதும், ஜனங்களுக்குப் படிப்பின்மையால் உண்டாகும் நஷ்டங்களைக்காட்டி அவர்களைப் படிப்பிக்கச் செய்வதும் தவிர, அவர்களுக்குச் சிக்கனத்தையும் கற்றுக்கொடுக்கின்றது. சங்கத்தின் கடன்களுக்கு ஒவ்வொரு மெம்பரும் பொறுப்பாவார்கள். ஆதலால், ஒவ்வொரு மெம்பரும் மற்ற மெம்பர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்க அவசியம் ஏற்படுகின்றது. இதனால், கடன் வாங்கின பணத்தை மெம்பர்கள் வீண் செலவு செய்ய முடிவதில்லை. குடிக்காரர்களும் சூதாடுகிறவர்களும் சங்கத்தினின்று நீக்கப்படுவார்கள் என்ற பயத்தினால், சிலர் நல்லவழிக்குத் திரும்பியிருக்கிறார்கள். சில இடங்களில் வியாஜ்ஜியங்களும் குறைந்திருக்கின்றன. கூட்டுறவு முயற்சியானது சுலபவட்டிக்குப் பணம் கிடைக்கும்படி செய்வதுடன், மெம்பர்களுக்கு நிதானம், வாய்தாதேதியில் பணம் கட்டும்படியான வாடிக்கை, பொய் சொல்லாமை, சட்டத்திற்குக் கட்டுப்படுதல், திருப்தி, சிக்கனம் முதலான நற்குணங்களையெல்லாம் போதிக்கத்தகுந்த சாதனமாயிருக்கின்றது.

பூ. சின்னசாமி ஐயர்.

---

## Anthathi Kalithurai.

BY MR. C. V. KUMARASAWMY PILLAI.

## அந்தாதிக் கலித்துறை.

திருப்பூந்துருத்தியில் ப்ரஹ்மஸ்ரீ நாராயணதீர்த்தஸ்வாமிகளின் யோகசமாதி ஆலயத்தில் இப்பிங்கள வருஷத்து மாசி௴ 5, 6, 7உ களில் தெய்வபக்தி, குருபக்தி, அடியார்பக்திகளில் மேம்பட்ட பெரியோர் பலர் கூடி ஷை ஸ்வாமிகளின் ஆராதன மஹோத்ஸவத்தைச் சிறப்பித்தனர். அப்பொழுது, திருவையாறு செண்ட்ரல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சி. வி. குமாரசுவாமிபிள்ளையவர்கள் குருபக்திவிசேஷத்தைக் குறித்து ஒன்றரைமணிகாலம் உபந்யஸித்தனர்; பின்பு, ஷை ஸ்வாமிகளைக்குறித்து அருமையாக அந்தாதிக் கலித்துறையால் பதினைந்துபாடல்கள் இயற்றிப் பொருள்விளக்கிப் படித்தனர். அவை படித்தற்கு இனியனவாயிருத்தலின், நம் அன்பர்களும் படித்து மகிழ்ச்சியுற இங்கு வெளியிடுகின்றோம்.

### தெய்வ வணக்கம்.

நாரா யணகுருவின் ஞானப் பெருமிதத்தை
நோரா யறைந்திடற்கென் னெஞ்சலரும்—போரா
மிதக்குஞ் சரத்தான் விருப்பா யளித்த
மதக்குஞ் சரத்தான் மலர்.

### குரு வணக்கம்.

ஈசன் பயந்த எம்பெரு மான்குக
தாசன் றுண்மலர் தலைக்கணி வோமே.

## நூல்.

## அந்தாதிக் கலித்துறை.

1. பூவே மிதந்திடும் பொன்னே கொழித்திடும் பூந்துறைசேர்
காவே ரியின்பெரு வெள்ளந் திளைத்திடுங் கண்ணுதலார்
தேவே வளர்ந்திடும் ஆலயம் ஓங்கிடுந் திம்புணருட்
டேவே யனைய விழியணங் கேவளம் எண்ணரிதே.

2. அரிதே யகிலும் அருமறை யந்தத் தமர்ந்தருளும்
சொரிதே னிதழித் தொடைபுனை வேணியன் தோகையொடு
பெரிதே மகிழ்ந்துறை பூந்திருக் கித்தலப் பேருமை
விரிதே னிமிரும் வெறிகுழற் கோதை விரிப்பதுவே.

3. வேதங் கடந்திடு மேலோ னருள்கொடு மேதினியில்
ஏதங் கடந்திடத் தோன்றின ஞான இருங்கதிரவன்
போதங் கடந்திடு நாரா யணகுரு பொற்றொடிகேள்
பேதங் கடந்திடு ஞானப் பெருமிதன் பேசிடினே.

4. பேசப் பெரிதும் இனிக்கும் அவன்புகழ் பேருலகில்
நேசப் பெருங்கடல் மூழ்கும் புனிதர்க்கு நித்தனருள்
பேசப் பரசிவ மூர்த்தி தலங்கள் பெருகியன்பு
வாசப் பலமலர் தூவிப் பணிந்தான் மடமயிலே.

5. மயிலே இவரும் பெருமான் உரைக்கு மனமுவந்த
எயிலே பொடித்த பழம்பொருள் வாழும் இனமணிகள்
வெயிலே விரிக்கும் மழபாடி கண்டு வியனெடுங்கண்
அயிலே யனையாய் ஒளிர்பூந் துருத்தி யடைந்தனனே.

6. அடைந்தவர் நாளொரு நல்லே ருழவன் அழுகுரல்கேட்
டுடைந்ததென் உள்ளம் எனலும் சுவாமியென் ஓஜஸ்தான்
மிடைந்தவிச் சூழலிற் போதலும் ஆவியை விட்டதந்தோ
குடைந்ததென் நெஞ்சமும் என்செய்கோ என்றான் குறுநகையே.

7. கய்யே யமர்த்திக் கரைந்திடல் எங்கது காட்டுகென
மய்யே இதுவென மூர்த்தி கரத்தால் வருடுதலும்
மெய்யே உயிர்பெற மெய்புத றித்தனை மீதினிலே
பொய்யே எனுமிடை யாளே நடந்தது பொய்யலவே.

8. பொய்யற்ற விச்செயல் கண்டுஞ் சிலபுன் பொறியிலிகள்
மெய்யுற்ற ஆவி பொருந்தும் ஒருவனை வீந்தவனென்
றய்யுற்ற நெஞ்சொடும் ஐயன் திருமுன் அருகிவிட்டுக்
நய்யுற்ற அங்கம் பிழைப்பியென் றேதினர் நங்கையரே.

9. நங்கைய ராசை வலைப்படும் ஏதம் நனியொழிந்த
சங்கையி லெங்குரு மூர்த்தி மரித்தவன் சற்றுமுயிர்ப்
பங்கையிங் கெய்திடான் பங்கமுற் றுனிவன் பாங்கிலெகன
மங்கையர் சூளா மணிபணித் தானவன் மாண்டவனை.

10. மாண்டவ னற்றுய் செயலறிந் தாங்கே மதிமயங்கி
ஆண்டவ னேயன் அருமைத் தலைமகன் ஆருயிரைக்
காண்டவ மேனிக் கருணைக் கடலே கனிந்துதவி
ஆண்டருள் வாயென அன்புக் கிரங்கினன் ஆரணங்கே.

11. ஆரணந் தேடரி யானவன் அன்பன் அழுதருகேல்
மாரணம் உற்றவன் உற்றவ னேபெற மாண்புடைய
பூரண ஆயுளோ டோரொரு மூவரைப் பொற்பினொடு
பாரணத் தாங்குவை பண்பிதே என்றனன் பைங்கிளியே.

12. பையவே சென்றொரு மாவடி நீழல் பரிந்தமர
வையகம் ஏத்திடும் பஞ்சாக திப்பதி வாழ்க்கைபெறு
மையலில் அந்தணன் பஞ்சாக தப்பேர் மருவியவன்
சையகம் வந்தவன் காலகம் வீழ்ந்தனன் கற்பகமே.

13. கற்பக வாழ்க்கையைக் கைப்படுதென் றுன்னினன் காற்கமலம்
அற்புதச் சென்னியிற் சூடியென் சிந்தை யமர்புரியும்
அற்பராம் ஐம்புலக் கள்வரை வாட்டியே ஆரமுதாம்
சிற்பர மூர்த்தியைக் காட்டுவா யென்றனன் தேமொழியே.

14. மொழிவேத சாரச் சடலான் அவற்கு முடிபொருளை
வழியே உணர்த்தி நெறிகாட்டி யாண்டனன் மற்றொருநகால்
வழபாடு செய்தே உவந்திடும் சீடரை வாழ்வளித்திங்
கொழியாத போகச மாகியிற் கூடினன் உத்தமியே

15. உத்தம ஞான குருமணி கூடின ஓர் தினத்தில்
சித்தம தாறிய சீடரும் பூசையைச் செம்மைபெற
வித்தகற் காற்றினர் மேலாம் பரிசிதை வேண்டினரிச்
சுத்தம னத்தர்செய் பூசை நலங்காண் சுடர்த்தொடியே.

வாழ்க காரா யணைகுரு மாணவர்
வாழ்க ஆரா தனைசெயு மாணவர்
வாழ்க பூந்தருத் தித்தல வாசிகள்
வாழ்க மன்னரும் மண்டலத் தாருமே.

சி. வி. குமாரசுவாமி பிள்ளை.

---

## Sita's Exile.

By Pandit P. K. Sreenivasachariar,

## சீதை வனம் புகுந்த சரிதம்.

(29-ம் பக்கத் தொடர்ச்சி.)

அக்காலத்தில், சீதைக்குக் கருப்பசின்னங் 'நீ இப்பொழுது வேண்டியிருப்பது என்?' கள் உண்டாயின. அவற்றையெல்லாம் நன்கு என்று வினவியருளினன். அவள் தான் விரும் நோக்கிய ஸ்ரீராமன், பிராட்டியை நோக்கி, பியதை விளம்புதற்கு வெட்கப்பட்டுப்

புன்னகைபூத்தனள். இராமன் பின்னும் பன்முறை, 'உன் விருப்பத்தைச் சொல்' என்று சொன்னபிறகு, சீதாபிராட்டி, 'யான் வேண்டியிருப்பது இது' என்று குறிப்பிட்டு இவற்றைச் சொல்வாள்:—"கங்காநதியிலுள்ள திவ்யமான தீர்த்துறைகளிலே குளித்துச் சந்தியாவந்தனம் செய்பவர்களும், விளங்குகின்ற புப்புரிநூல் அலைசயப்பெற்ற மார்பையுடையவர்களும், மரவுரிதரித்துச் சிவந்த சடையைக் கட்டியுள்ளவர்களும், சிறந்த மிக்க தவத்தை உடையவர்களுமான முனிவர்கள் அக்கங்கையாற்றின் கரையில் வாழ்கிற ஆச்சிரமங்களை மற்றொருகால் அடைந்து, அவர்களுக்குக் குற்றேவல்செய்து, அங்கு ஒருநாள் தங்கியிருத்தலையும் யான் விரும்பியிருக்கின்றேன்" என்று பத்தினி சொல்ல, இராமபிரான், 'நாளைக்கு நாம் உனக்குத் தவத்தோர் தங்கி வசிக்கின்ற ஆச்சிரமங்களைக் காட்டுவோம்' என்றுரைத்து, பிராட்டியை அந்தப்புரத்திலே விட்டு, வாட்படையேந்திய விசயனும், பத்திரனும், தந்தவக்த்ரனும், சுமாகதனும், சுராஞ்சியும், காளியனும் முதலிய ஒற்றர்கள் சொன்ன பரிகாச கதைகளைக் கேட்டு, அவற்றை இனிது கொண்டாடி அங்கு இருந்தவன், அவர்களை நோக்கி, 'இந்தக்கதைகள் கிடக்கட்டும்: இக்கோசல நாட்டிலும் இவ்வயோத்தியாபுரியிலும் உள்ள சனங்கள் இப்பொழுது தமக்குள் யதேச்சையாகப் பேசிக்கொள்ளும் அவ்வார்த்தைகளைச் சொல்லுங்கள். அவையே, அரசர்கள் அநுதினமும் அல்லும்பகலும் அநவரதமும் கேட்டறியத்தக்கவையாம்' என்று சொன்னான். அவ்வொற்றர்கள் இவற்றை உரைப்பவராயினர்:—

"வன்றெறி கடலை மலைகளா லடைத்து,
மதிளிலங்காபுரி யழித்து
வெந்திற லரக்கர் குலத்தை வேரறுத்து,
விண்ணவர்கோன் தலையெடுப்பு
இந்திரசித்தைக் கொன் றிராவணனை
ஈரைந்துதலையறுத் தருட்டும்
சுந்தரவில்லிக் கெதிரிலை யென்று
சொல்லுவார் தொல்லுலகுள்ளோர்."

"அலைகடலை மலையினங்கொண்டு அணைகட்டிக் கடந்து, மதிள்சூழ்ந்த இலங்காபுரியை அழித்து, கொடிய வலிமையையுடைய அரக்கர் குலத்தை வேரறுத்து, இந்திரன் தலையெடுக்கும்படி இராவணன்மகனை இந்திரசித்தைக் கொன்று, இராவணனைப் பத்துத்தலைகளையும் அறுத்து, அவனுடலைத் தரையில் விழுந்துருளாச் செய்த அழகிய கோதண்டமென்னும் வில்லேந்திய வீரனான இராமனுக்கு எதிர் எவரும் இலர் என்று உலகிலுள்ளவரனைவரும் உரைக்கின்றனர்" என்றனர்.

அப்பொழுது அவ்வேவுகாரர்கள் இங்ஙனம் சொல்லக்கேட்ட சக்கரவர்த்தித்திருமகன், அவர்களை நோக்கி, 'நாங்கள் இந்நகரத்திலும இந்நாட்டிலும் எங்களைக்குறித்துப் பிறக்கிற நன்மையும் தீமையுங் கேட்டு, எங்களிடமுள்ள தீங்குகளை அகற்றி, சிறந்தவற்றைச் செய்வோம். ஆதலால், நீங்கள் செவியுற்ற நல்லவை தீயவை என்னும் இரண்டையும் சொல்லுங்கள். நீங்கள் ஒன்றுக்கும் கூசாதீர்' என்று சொன்னான். அப்போது அவர்கள், 'குற்றமற்றவனே! கேட்பாய்' என்று சொல்லி, உரைப்பார்:—

"மன்னவ னிராமன் மானபங்கத்தை
மனத்தினால்நினைக்கிலன்: வானோர்க்கு
இன்னல்செய் தொழுகு மிராவணன் கொடுபோந்து
இடைவிடா திராறுதிங்கள்
தன்னெடு நகரிதனிற் சிறைவைத்த
தையலைத் தாரமாய்க் கொண்டு
பின்னையும் வாழ்க்கை பேரிழுக் கென்று
பேசுவார் பெருநிலத் துள்ளோர்."

"நமது அரசனாகிய இராமன் மானபங்கத்தை மனத்தினால் நினைக்கின்றிலன்: தேவர்கட்குத் தீங்குசெய்துநடக்கின்ற இராவணனென்னும் தீயோன் எடுத்துக்கொண்டுபோய்ப் பன்னிரண்டுமாதகாலம் தனது இலங்காபுரியிலே இடைவிடாது சிறையில் வைத்திருந்த சீதையை அதன்பின்பும் தாரமாகக்கொண்டு வாழ்தல் பெருங்குற்றமாம்' என்று உலகத்தவர்கள் உரைக்கின்றார்கள்."

அவ்வொற்றர்கள் தம்மில் மாறுபாடின்றி ஒத்து இங்ஙனம் உரைத்திட்ட கொடுஞ்சொல் செவியின்வழியே மனத்திற் பொருந்த, ஸ்ரீராமபிரான், கூரிய வேற்படை மார்பில் தைத்தது போல வருந்தி, தன் சிந்தை தளர்ந்தபின்பு, தனக்கு நேர்ந்த மானக்கேட்டினால் சபையிலிருக்க மனங்கொள்ளாமல் வேறோரிடத்தில் இருந்துகொண்டு, புத்திமான்களான தன் தம்பிமார்களை அழைத்து, தான் கேள்வியுற்ற சொற்களெல்லாவற்றையும் அவர்களுக்குத் தெரிவுற உரைப்பவனாய், அவர்களை நோக்கி இந்தஇந்த வார்த்தைகளைச் சொல்வான் :—

"எனது உயிர் நீங்களே. எனது வலிமை நீங்களே. எனக்கு உற்ற துணையாகின்றவர்களும் நீங்களே. எனது அபிவிருத்தியும் நீங்களே. எனது தவப்பயன் நீங்களே. என் உடன்பிறந்தவர்களும் நீங்களே. எனக்கு அரசாட்சியினால் வரும் இன்பம் நீங்களே. ஆதலால், எனக்கு வரும் பழி உங்கட்கு வரும் பழியே. என் புகழும் அத்தகையதேயாம். ஆனபின், யான் இப்பொழுது சொல்பவற்றை நீங்களனைவரும் கருத்தூன்றிக் கேளுங்கள் : சீதை, தீய இராக்கதனான இராவணனது சிறைக்காவலிலே இருந்து, பின்பு நல்லொழுக்கத்துக்குச் சாக்ஷியாகிற தீயிலே முழுகியெழுந்து, மிக்க தவத்தையுடைய முனிவர்களும் தேவர்களெல்லாரும் எனது மனமும் அறியத் தூய்மையுடையவளாயிருந்தாளாயினும், அவள்விஷயமாக உலகத்தவர் உரைக்கின்ற பெரும்பழியைக் கேட்டு எனது உள்ளம் தளர்கின்றது. உலகிலுள்ளோர்க்கு ஒத்து நடவாவிட்டால் பிழைத்திருத்தலினால் பயன்யாது? "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும், கல்லா ரறிவிலா தார்." சத்தியமான ஒழுக்கத்தால்மட்டும் என்ன பயன்? உலகத்திலுள்ளவர்கள் இல்லாததொன்றை உள்ளதென்று சொன்னால், அஃது உள்ளதென்றே அனைவராலுங் கொள்ளப்படும். உள்ளதான யாதொருபொருளை அவர்கள் இல்லையென்று சொன்னால், அப்பொருள் இல்லாததென்று அனைவராலுங் கொள்ளப்படும். இஃது உலகத்தின் இயற்கை. ஆதலால், அச்சீதையை முனிவர் வசிக்கிற ஆச்சிரமத்தின் அருகிலே விட்டிடுவோம். இது யான் துணிந்த காரியம். இனி வேறு எண்ணுவதொரு பொருள் இல்லை".

இவ்வாறு இராமன் சொல்லக்கேட்ட இனிய உயிரோடொத்த அவனது தம்பியர், தாம் செய்வது இன்னதென்று அறியாதவர்களாய், பிராட்டியும் பெருமானும் வனம்போகும்படி கொடிய கைகேயி சூழ்ச்சிசெய்த அந்நாளிற் கலங்கின கலக்கத்தினும் மிகுதியாகக் கலங்கி, மனத்தில் மிக்கெழுகின்ற துயரத்தை உடையவர்களாய், எவ்வகையிலும் இது விலக்கமுடியாததென்று எண்ணி, இடி விழப்பெற்றார் போலத் திகைத்திருந்தனர்.

மூன்று உலகங்களையும் கலக்குவேனென்று கருதுவனாயின் அவ்வாறே ஒருகணப்பொழுதிலே செய்து முடிக்கவல்ல லக்ஷ்மணனை இராமன் நோக்கி, 'இப்பொழுது யான் துணிந்த செயலை விலக்குவேன்' என்னும் எண்ணத்தை விட்டு வலிய தவத்தையுடையவர்களான முனிவர்கள் வாழ்கிற வனத்தில் சீதையைக்கொண்டு விடுவாயாக. இன்னும் யான் கூறுவதைக் கேள் : முனிவர்கள் தவஞ்செய்கின்ற வனங்களையெல்லாம் சீதைக்கு யான் காட்டுவதாக இசைந்திருக்கிறேன். சொல்லியவண்ணம் நான்செய்வேனென்று எண்ணி அவளும் மகிழ்ந்திருக்கிறாள். சுமந்திரனுக்குத் தெரிவித்துத் தேர் கொணரச்சொல்லி, தேரின்மேல் சீதையை ஏற்றிக்கொண்டு போய், நமது தந்தையின் சிறந்த பிராணசிநேகிதனான வான்மீகி முனிவன் தவத்தைச் செய்கின்ற வனத்திலே அவளை விட்டு வருவாய்."

இராமன் இவ்வாறு சொல்ல, கேட்ட இலக்குமணன், கொடிய துயரத்துடனே எழுந்து, சுமந்திரனுக்குத் தேர் சித்தஞ்செய்து கொணருமாறு தெரிவித்து, அவனைக்கொண்டு பெரிய அழகிய இரதத்தை அலங்காரத்தோடு சித்தப்படுத்தி, பொன்மயமாய் விளங்குகின்ற இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களை அணிந்த சீதாபிராட்டியினது திருமாளிகையின் அழகிய இரத்தின

மயமான வாசலிலே போய்ச்சேர்ந்தான். அது கண்டு, 'இன்று இங்கு வந்த கருத்து என்ன?' என்று அவ்வந்தப்புரத்து ஏவலாளர்கள் வினவினார்கள்.

அவர்களுக்கு இலக்குமணன், "பெரியோர்களான முனிவர்களுடைய திருவடித்தாமரைகளைச் சீதை வணங்குமாறு, அவளை அழைத்துக்கொண்டுபோய் அவட்கு அவர்களைக் காட்டு' என்று இராமபிரான் எனக்குக் கட்டளைகூறினான்" என்றுசொன்னான். அவ்வாயிலே, அவர்கள் அந்தப்புரத்தினுட் சென்று, அச்செய்தியைப் பிராட்டிக்குக் கூறினர்.

உடனே, அவள், பொங்கியெழுந்த சந்தோஷத்தினால் இனிய உயிர் களிக்கப்பெற்று, மின்னல்போல் ஒளிவீசுகின்ற ஆரம் முதலிய ஆபரணங்களையும், விளங்குகின்ற சிறப்புள்ள புதுமையான அழகிய ஆடைகளையும், இவைபோன்ற மற்றும் வேண்டுவனவற்றையும் தேர்ந்தெடுத்துக்கொண்டு, இளையபெருமாள் சொன்னபடி இரதமேறினாள். அந்தத் தேர், நீர் கிழியும்படி கடலில் விரைந்து செல்லும் மரக்கலம்போல விரைந்து சென்றது.

பிராட்டி, வலக்கண் துடிக்கவும், வயிறு எரியவும் பெற்று, அத்தீநிமித்தத்தால் தன் உள்ளமும் உடலும் நடுங்க, தன் மைத்துனனை நோக்கி, 'லக்ஷ்மணா! எனக்கு நேர்ந்த இத்தீநிமித்தத்தால் என்ன தீங்கு விளையுமோ! என்று நான் அறியேன். விலக்கமுடியாத விதியினால் விளையும் விளைவை உலகில் அறிவார் யார்? தாம் அடையும் துயரத்தை மகளிர் அறியார்' என்று சொல்லி, 'தெய்வமே! எனக்கு நேர்ந்த இத்தீநிமித்தத்தால், பரிசுத்தமான மனத்தையுடைய என் சுவாமியாகிய கணவனுக்கும், குற்றமற்ற என் கொழுந்தன்மார்க்கும், மாமியர்க்கும், மற்றைய சிறந்த சுற்றத்தார்க்கும், வளமுள்ள அயோத்தியாபுரியில் வாழும் ஜனங்களுக்கும் யாதொருதீமையும் நேரிடாமல், எல்லாம் நன்மையே ஆகக்கடவன" என்று உரைத்துப் பிரார்த்தித்துக் கைகூப்பி வணங்கினாள்.

அத்தகைய தீக்குறிகளைச் சீதை சொல்ல, இலக்குமணன் கேட்டு, மனத்திலெழுகின்ற துயரத்தையுடையவனாய், 'நீ சொன்ன இத்தீநிமித்தங்களால் நமது உறவினர் யாதொரு துன்பமுமின்றிச் சௌக்கியத்துடன் இனிது இருப்பார்கள்' என்று தேறுதல்கூறினான். உடனே சீதை, சந்தோஷமுண்டாகப்பெற்றவளாய், மிக்க துன்பத்தை விட்டு, அத்தேரினிடத்தில் நிலைகொண்டனள். அத்தேர், சீதை, இலக்குமணன், சுமந்திரன் என்னும் அம்மூவரையும் தன்மேற்கொண்டு தென்றிசை நோக்கிச் சென்றது.

களங்கமில்லாத கற்பிற் சிறந்த சீதையும், எதிர்காலத்தில் நேரும் செயல்களை முன்னமே ஊகித்தறியவல்ல தூய அறிவையுடைய அமைச்சனாகிய சுமந்திரனும், துயரம் மிக்க மனத்தையுடைய இலக்குமணனும், கோமதியென்னும் நதியைச் சேர்ந்து, சூரியாஸ்தமனம் ஆனதனால், அன்றையிரவு அந்நதிக்கரையில் தங்கி, மறுநாள் சூரியன் வானத்துச்சியில் வருமளவில், பெரிய நீர்ப்பெருக்கையுடைய கங்காநதியைச் சேர்ந்தார்கள்.

அருகிற்சென்று கங்காநதியைக் கண்டவளவில், இலக்குமணன் கண்கள் நீர்துளிக்கத் தவிப்படைந்து, மனத்திலே பொங்கிய துயரம் புறத்தில் தோன்றாதபடி அதனை அடக்கமுயலவும், அந்தச் சோகம் அடங்காமல் உள்ளிருந்து விம்மி வெளிப்பட, சீதை அதைக்கண்டு, 'லக்ஷ்மணா! இவ்விடத்தில் நீ இவ்வாறு துயரமுறுதல் என்? சொல்வாய்' என்று வினவினாள். அதற்கு இலக்குமணன், மறுமொழி கொடாமல் வாய்விட்டுக் கதறியழுதனன்.

அப்பொது, பிராட்டி, 'பரிசுத்தமான இக்கங்காநதியைப்பார்த்தவர்களெல்லோரும், உள்ளம் உவந்து, கைகூப்பி வணங்கி, இதில் நீராடுவார்கள். அங்ஙனமிருக்க, தூய்மைக்குணமுடையவனே! இந்நதியைக் கண்டவளவிலே, நீ சோகமடைவது எக்காரணம்பற்றி? உலகில் உன்னைத் துன்பப்படுத்தவல்லவர் எவருமில்

லையே'! என்று சொன்னான். அதற்கு இளைய பெருமாள், 'இராமனை ஒருநாளும் விட்டுப் பிரிந்தறியாதவனான நான், நாளிரண்டாக விட்டுப் பிரிந்தேன். அப்பெருமானை நினைத்தலால் நேர்ந்த சோகம் இது' என்று அச்சோகத்தின் காரணத்தை உள்ளபடி உரையாமல் மறைத்து வேறாகக் கூறினன். அதற்குப் பிராட்டி மறுமொழி கூறுவாள் :—

"நன்மைக்கு மூலகாரணமாகிற நல்லொழுக்கத்தையுடைய சிறந்த தவத்தைச் செய்த முனிவர்களையெல்லாம் சென்று திருவடி தொழுது, அதனால் தீவினையனைத்தையும் போக்கி, விளங்குகின்ற ஒளியையுடைய ஆடைகளையும் ஆபரணங்களையும் முன்பு எனக்குத் துணையான தோழியர்களாகிய ரிஷிபுத்திரிகளுக்கும் அவர்களைப் பெற்று வளர்த்த அன்னையர்க்கும் அளித்தற்காக, இன்றை ஒருநாள் மாத்திரமே இங்குத் தங்கி, நாளைக்கே நாம் மீண்டு சென்றுவிடுவோம். இலக்ஷ்மணா! துயரமடையாதே."

இவ்வார்த்தைகளைச் சீதை சொல்ல, இலக்குமணன் துயரத்தை உள்ளே அரிதின் அடக்கிக் கொண்டு, கங்காநதியைப் படகுகொண்டு கடந்து இறங்கி நடந்துசென்று, அவ்வாற்றின் தென் கரைப்புறத்தைச் சேர்ந்து, அங்குச் சீதையை நான்முறைப்படி வலஞ்செய்து, அவளுடைய திருவடிகளை வணங்கி, 'ஏழுவகையுலகங்களையும் அடிமையாகவுடையவளே! தாயே! என் உரையைக் கேள்' என்று சொல்ல, அச்சீதை 'யாது? சொல்' என்று வினவினள். இலக்குமணன் கொடிய துன்பம் மேன்மேல் மிக அதிகப்பட, கண்களினின்று நீர் வெள்ளமாகப் பெருக, வலிமை ஒடுங்க, நீர் வறண்டு வாய் உலர, மனம் அஞ்சி நடுங்க நாக்குத்தடுமாறுகலால், சிரமப்பட்டுப் பிடுங்கிய சொற்களையுடையவனாய், இவ்விவ்வார்த்தைகளை மெள்ளமெள்ளச் சொல்லத்தொடங்கினான்:—

"உத்தமகுணங்களையுடையவளே! உலகமாதாவே! பரிசுத்தனாகிய சனகமகாராசனது யாகசாலையினின்று அவதரித்த தூயவளே! அறிஞனான இராமபிரான் ஏவிவிட்ட செயல்களையெல்லாம் உள்ளபடி சொல்வேன்" என்று சொல்லி, அவற்றைச் சொல்வான் :—"முகம் வாட்டமடைந்தவனும், கொடிய அவமானமாகிய வேற்படை நெஞ்சிற் பதிய அதனாலான வருத்தத்தால் பெருமூச்சுவிடுபவனும், தான் முன்னம் எண்ணிய காரியத்தின்மேலே விரைந்து செல்லும் மனத்தையுடையவனுமான ஸ்ரீராமபிரான், விரைவாகத் தான் அழைத்தலால் தன்பக்கத்தில் வந்துசேர்ந்த தனது தம்பியர்மூவருள்; என்னைக்குறித்து இத்தகைய வார்த்தைகளைச் சொல்பவனானான் :—'உலகத்தார் உள்ளதென்றது உண்மையில் இல்லாததாயினும் உள்ளதாம். உலகத்தார் இல்லையென்றது உண்மையில் உள்ளதாயினும் இல்லையாம். உலகத்தார் உள்ளதென்று உரைத்ததை ஒருவன் தான் இல்லையென்று உரைப்பானாயின், உலகத்தார்க்கு அவன் பேயாய்விடுவான். ஆதலால் உண்மையால் யாதொருபயனுமில்லை. சீதையைக் கொடிய இராவணன் கவர்ந்துகொண்டுபோய் நெடுநாள் சிறையிலே வைத்திருக்க, இராமன் அவளிடத்துக் கொண்ட காதலால், அவளை மறுபடியும் உடன்வைத்துக்கொண்டு அவளோடு கூடிவாழ்கிற வாழ்வினும் சாதலே அழகியது' என்று இவ்வுலகத்திலுள்ளார் சொல்லுகிறார்கள். ஆதலால், உண்மையில் பரிசுத்தையென்றே அறிந்துவைத்தும், அவளை விடத் துணிந்தோம்' என்று சொன்னான். நாங்களெல்லோரும் எதிர்மொழிகொடுக்க அஞ்சி, அவ்விடத்தில் நடுங்கி நின்றோம். அப்பொழுது, பெருமைக்குணமுடைய அவ்விராமன் என்னை நோக்கி, 'தேரைச் சித்தஞ்செய்யும்படி சுமந்திரனுக்குச் சொல்லி, இப்பொழுது இச்சுமந்திரனோடு அச்சீதையைத் தேரின்மேலேற்றி அவ்வயோத்தி நகரையும், கோசலநாட்டின் எல்லையையும் கடந்துசென்று, வனஞ்சேர்ந்து, நமது தந்தையாகிய தசரதனுக்கு இனிய உயிர்த்தோழனாகிய பெருமைபெற்ற வான்மீகிமாமுனிவன் எழுந்தருளியிருக்கின்ற பர்ணசாலையின் அருகில்

சீதையை விட்டிடு' என்று எனக்குக் கட்டளை யிட்டான். இராமபிரான் இங்ஙனம் சொல்ல, அப்பெருமானது கட்டளையை மறுத்தற்கு அஞ்சி அதற்காக இப்பொழுது உன்னை அழைத்துக்கொண்டுவந்தேன்" என்று இலக்குமணன் சொல்லி வருந்தினன்.

(இன்னும் வரும்)

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

# Importance of National Education.

BY MR. V. MUTHUSAMY IYER, M.A., L.T.

## தேசீயக் கல்விச் சிறப்பு.

காப்புச்செய்யுள் வெண்பா.

தேசீயக் கல்விச் சிறப்புரைக்கச் சின்மயமாய்த்
தேசோ மயமாய்த் திகழீசா!—மாசாரும்
சிந்தை யுடைய சிறியேற்கு நல்லறிவு
தந்தருள்க; உள்ளம் தழைத்து.

அகவற்பா.

(கல்வியின் பெருமை.)

அளவிலாக் கருணை யாண்டவன் சிருஷ்டியில்,
அலைகடல் சூழும் அம்புவி மீது,
பலபல நிறமும் பலபல திறமும்
பலபல நிதியும் பலபல மதியும்
படைத்துள ராகும் பல்வகை மாந்தர்
படிப்படி வேறு பட்டுள ரெனினும்,
ஐம்பொறி யுணர்வோ டமையா தறிவெனும்
செம்மைசே ரீசன் திவ்யாம் சத்தினை
ஆறாம் உணர்வா யவரவர் உளத்தில்
ஏறவோ தாழவோ இயற்கையிற் பெறுவர்;
இந்த அறிவினுக் கிருப்பிட மாகும்
சிந்தையை மாந்தர் செவ்வழி செலுத்தி,
மாசார் தீநெறி மறந்தும் நினையா (து)
ஆசா னுரைப்ப தாய்ந்தாய்ந் தறிந்தே,
ஈசுர பக்தி, இன்னருள், வாய்மை,
தேசுறு நற்புகழ், திருந்துமா சாரம்
இவைமுதல் நன்மைகள் எய்துதல் தானே,
புவிமிசைக் கல்வியாய்ப் புகலுவர் மேலோர்
கல்வியின் பெருமையோ கணக்கிடல் அரிதது.
பல்விதம் பகரினும் பகர்தற் பாலதோ?
கல்வியே அறமாம்; கல்வியே பொருளாம்;
கல்வியே இன்பம்; கல்வியே வீடு;
கற்றோர் தாமே கண்ணுடை யவர்கள்;
மற்றோர் முகத்து வாய்ந்தவை புண்ணே;
கலைவலார் மதிநலம், காசினி முழுதும்
கலைநிறை மதியெனக் காண்போர்க் கெல்லாம்
இன்பமும் கிளர்ச்சியும் இனிதின் அளிக்கும்.
என்பல கூறுதல்? இவ்வுல கத்தே
ஆதி நாள்முதல் அரும்புகழ் தொகுத்துப்
பூத வுடலம் போயின பின்னும்
என்றும் நிலையாய் இலங்குவோர் யாவர்?
என்றே நாமிங் கெண்ணு மிடத்து,—
வால்மீகி, வியாசர், வாகம்பர், ஔவை
போல்மேவு புண்ணியப் புலவரே யன்றோ?
வேலுள ராகும் வீரரை யரசரைக்
கூறிடல், அதுமதிக் குறைவே யாகும்.

---

நொண்டிச்சிந்து.

(பண்டை இந்தியாவில் கல்விநிலைமை.)

இப்படிச் சிறப்புடைய—கல்வியில்
இந்தியா மிகவும் முந்தி யிருந்ததாம்
என்பதை உலகறியும்;—எனினும்,
ஒருசில விவரம் உரைசெய் தால்
உபயோக மேயாகும்:—வேத
சாஸ்திரங்கள், ஈசன் ஸ்தோத்திர நூல்கள்,
சாத்விக குணம் விளக்கும்;—அரிய
நீதிநூல்கள் பல போத நூல்கள்,
நிகரில் தத்துவ நூல்கள்,—இன்னும்,
கற்பனை அலங்காரம் பொற்புறக் கொண்டு,
கதைநயம், உயர்நீதி—முதலாம்
சொற்பொருள் நலங்கள் பற்பல சேரும்
சுவைமிகு காவ்ய நூல்கள்,—இதி
காச புராணங்கள், மாசிலாச் சிற்பம்,

கணிதம், சோதிடம், வைத்யம்,—இவை [போல்
கலைபலவற்றை மலைவிளக்காகக்
காட்டும் பல நூல்கள் ;—வேறு
நாட்டுளோர் காட்டு முரட்டரென
நாட்டும் படியிருந்த—ஆதி
காலமுதலாய் நமது சிலநாட்டில்
கனரிஷி முதலோரால்—நல்ல
குருசிஷ்ய முறையில் பரம்பரையாய்
கூறிவைத்தவை கோடி.

---

## கும்மிமெட்டு.

(தற்காலநிலை.)

இப்படிப் பற்பல வித்தை மலிந்து
இந்தியா முன்னோர் செழித்திருக்க,
இடையிற் பற்பல மஹமதியர்கள்
இந்நாட்டிற் புகுந்தாண்டார்கள் ;
இந்த இடையிட்ட காலத்திலே, நல்ல
இந்தியக் கல்வியும், தர்மங்களும்,
மதத் துவேஷத்துட னுட்கலகங்களால்
மங்குத லுற்றன கொஞ்சங் கொஞ்சம்.
இவர்க்குப்பின் வந்த ஐரோப்பியர்களில்
இங்கிலீஷ் காரர்கை யேற்றமுற்றே,
இந்தியாவை யிப்போ தாள்வதில் நமக்கு
எய்திடு நன்மை பலவுமுண்டு,
அந்த நன்மைகளில் ஒன்றெனவே நாம்
ஆங்கிலக் கல்வியைக் கூறிடலாம் ;
ஆங்கிலத் தாலே நாம் தன்மறுப் பொற் [றமை
அறிவு விசால மடைகின்றோம்.
ஆயினும், இந்தியர் முப்பத்தைந்துகோடி.
ஆனவர்க்கெல்லாம் துரைத்தனத்தார்,
ஆங்கில முறையிற் கல்வி பயிற்றுதல்,
அசாத்தியத்தோ டனாவசியமுமாம் ;
மேலும், கவனித்துப் பார்க்கில், நமது
மேலாம் கவர்ன்மெண்டார் எல்லார்க்கும்
பொதுவாய்ப் புத்திக் குரியதா மொன்றே
புரிந்து வருவது சாத்தியமாம் ;
அதற்கும் ராஜாங்கத்தார் அரசிறைப் [பொருளில்
அதிகம் எடுக்க முடியாது ;
ஏனெனில், காவல், மராமத், சுகாதாரம்,
இவைபிறவற்றுக்கும் பணம் வேண்டும் ;
ஆதலால், கல்வி விஷயமாக நம்
அரசாங்கத்தார் செய்வதெல்லாம்,
இந்திய ஜனத்தொகைக் கீடுநோக்கில், அது
என்றென்றும் போதாமல் தானிருக்கும் ;
அன்றியும், கல்விக் கனுகூலம் பல
அரசாங்கத்தார்கள் செய்தாலும்,
ஆசாரம், பாஷை அனுஷ்டானம், மதம்
ஆன இவை வித்தியாசத்தினால்,
நம்முடை யிந்தியா நாட்டுக் கிசைந்த
நலம் முழுவதும் நண்ணாது ;
ஆகையால், இந்தியக் கல்வி சிறக்க,
ஆசையோ டிந்திய கனவான்கள்
வேண்டும் பணமிகச் சேகரித்துத் தக்க
விற்பன்னர்தம்முடன் யோசித்துத்,
தேசியக் கல்வி நம்தேசமெங்கும் வெகு
தேஜஸுடனே பரவிவர,
ஆன முயற்சிகள் அறிஞர்கள் பற்பலர்
ஆழ்ந்து நினைத்துச் சொல்லும்வண்ணம்
ஆத்திரத்தோ டிந்திய புத்திரர் நாம் [செயின்
அடியினிற் கண்ட பலன்கள் உண்டாம்.

## ஆனந்தக்களிப்பு.

(தேசியக் கல்விப்பயன்.)

தேசியக்கல்வியால் நாளும்—நல்ல
செல்வம் வர்த்தகத்துடன் சேர் [ந்தெங்கும் நீளும் ;
தொழில்கள் பலபல கொழிக்கும் ;—நாட்டில்
தொன்மை வளமெலாம் தோன்றிச் செழிக்கும் ;
நாடெங்கும் அஞ்ஞானம் நீங்கும் ;—தூய
நல்லவரிடம் அபிமானமே ஓங்கும் ;
ஒத்துழைப்பென்பது கூடும்—இப்போ (து)
உள்ள மதத்வேஷம் ஊரைவிட் டோடும் ;
கல்விக்குச் செலவு குறையும் ;—வெறுங்
காசுக்கா யுழைத்திடு மாசையும் மறையும் ;
தேசாபிமானம் செழிக்கும் ;—என்றும்
சிறுமைசேர் தன்னயப் பேயும் ஒளிக்கும் ;
தாய்பாஷைக்கு நல்ல காலம் ;—இந்தத்

கலிமைந்தும் ஓங்குமே புண்ணிய சீலம்;
சொற்ப வரவிருந்தாலும்:—தோன்றும்
தூய கருத்தே உளத்தி லெங்காலும்;
நீசபுத்தி மிகமங்கும்;—உண்மை
ராஜபக்தி மேலும் நலமுறப் பொங்கும்;
ஈச விச்வாசம் இலங்கும்;—எங்கும்
நேசம் பெருகவே நேர்மை துலங்கும்;
இந்திய மாதாவின் கீர்த்தி—வளர,
மைந்தர்கள் நாடிது செய்வதே நேர்த்தி.
அருமையாம் தேசிய வித்தை—இதனை
ஆதரிப்பதில் வேணும் உள்ளத்தில் சிரத்தை
இந்த நல்முயற்சிக்கே உதவி - செய்பவர்க்(கு)
இந்துமாதேவி யருள்வள் நற்பதவி.

### வாழ்த்து.

வாழி தேசிய வித்தையே—நாட்டில்
வாழி யதனால் வளம்பல மெய்யே
வாழிநாம் மிக்கிபா வாழி—நாளும்
வாழி யன்னைபுகழ் வழிவழி யூழி
வாழிநம் ஜார்ஜ்மன் வாழி—மிக
வாழியவர் செங்கோல் மென்மேலும் வாழி
வாழிசர் வேச்வரன் கருணை—என்றும்
வாழிநம் முள்ளத்தில் அவன்நாம ஸ்மரணை.

வே. முத்துசாமி ஐயர் எம். ஏ; எல். டி.

---

## Ancient Stories of South India.
## தென்னிந்திய புராதனக் கதைகள்.

(20ம் பக்கத் தொடர்ச்சி.)

பகல்திருடன் திராக்ஷாபுரம் போய்ச்சேர்ந்து ஒரு அன்னசத்திரத்தில் சாப்பிட்டு நாலைந்து தினங்கள் பர்யந்தம் ஊரெல்லாம் ஸ்வேச்சையாய்த் திரிந்துபார்த்துக் கடைசியாய்த் தன் தந்தையிருந்த இடத்தை அறிந்துகொண்டான். பிறகு, ஒருநாள் சாயுங்காலம் காசிராஜனது காச்மீரச் சால்வையைப் பகட்டாய்த் தரித்துக்கொண்டு, ரத்னவதி வீட்டுக்கெதிராக இரண்டு மூன்றுதரம் உலாவினான். அப்போது ஷிகார் போய்க்கொண்டிருந்த ரத்னவதியும் ராத்திருடனும் அவனைப்பார்த்தார்கள். அவன் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைப் பார்க்கும்போதே, ரத்னவதிக்கு அதன்மீது அபேக்ஷை உண்டாயிற்று. ராத்திருடனுக்கும் அந்தச் சால்வை நாம் திருடிவந்த சால்வைதானோ? என்ற ஸந்தேஹம் ஜனித்தது. அவன் இவ்வாறு மனதுக்குள் ஸந்தேஹப்பட்டுக்கொண்டிருக்கும்போதே, ரத்னவதி 'கண்ணா? எனக்கு அதைபொத்த சால்வையொன்று வாங்கிக்கொடுக்கிறாயா? எனக் கேட்டாள்.' அதற்கு ராத்திருடன் 'பைத்தியக்காரி, அதைபொத்த சால்வையேன்? நான் அதையே கொண்டுவந்து கொடுக்கிறேன்' என்றான். அதைக்கேட்டு ரத்னவதி அதிக ஸந்தோஷப்பட்டு, இன்றே வேண்டுமென்றாள். அப்படியானால், நீ வீட்டுக்குப்போ எனக்கூறி அவளையனுப்பிவிட்டு, ராத்திருடன் அந்த நபர் இருப்பது, உண்பது, உறங்குவதாகிய முதலிய இடங்களைக் கண்டு கொள்ள எண்ணங்கொண்டு யாதொன்றும் தெரியாதவனைப்போல் அவன் பின்னரே சென்றான். பகல்திருடன் இவையெல்லாவற்றையும் கவனித்துக்கொண்டே சென்றான். தன் தகப்பனார் தன்னைப் பின்பற்றி வருவதைக்கண்டு ஸந்தோஷித்து அவன் மெதுவாய்த் தன் ஜாகைக்கு வந்துவிட்டான். ராத்திருடன் அவனுடன் ஸத்ரத்துக்குள் நுழைந்து, 'பாட்டியம்மா, சாப்பாடு போடுவதற்கு வேளைக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்' என்று இப்படியப்படி பேசிக்கொண்டே ராத்திருடன், பகல்திருடன் தங்கியிருந்த வீட்டின் உட்புறங்களை நன்றாய்க் கவனித்துக்கொண்டிருந்து, கடைசியில் பாட்டியம்மாளுக்கு ஏதோ ஸமாதானம் சொல்லி விட்டுப் போய்விட்டான். பகல்திருடன் நடந்த

வற்றையெல்லாம் பார்த்துத் தன் தங்கை அன்றிரவு அந்த வீட்டுக்கு வரப்போகிறாளென்று நிச்சயஞ்செய்துகொண்டான்.

பொழுதோடு போஜனஞ்செய்துவிட்டுப் பகல்திருடன் சால்வையைத் தலையணையாக வைத்துக்கொண்டு, நீர் நிறைந்த கலச மொன்றை மார்மீதுவைத்துத் தூங்கத் தொடங்கிவிட்டான். ராத்திருடன் இரவு இரண்டு ஜாமத்துக்கெல்லாம் அதிசாதுர்யமாக அந்த வீட்டுக்குள் நுழைந்து, பகல்திருடன் படுத்திருந்த அறைக்குள்வந்து பார்த்து, அவனுடைய ஜாக்ரதையைக் கண்டு வியந்து கலசம் சாயாமலும் அவன் விழித்துக் கொள்ளாமலும் மெள்ள மெதுவாகத் தலையைத் தூக்கிச் சால்வையை யெடுத்துக்கொண்டு போய்விட்டான். காலையிலெழுந்து பார்க்கையில் சால்வையைக் காணோம். பகல்திருடன் அதி ஆச்சர்யமடைந்தான், 'பலே, என் தகப்பனார் சமத்காரம் அற்பசொற்பமாகக் காணோம்; இருந்தாலும், ஆகட்டும் ஒருகை பார்ப்போம்' என்று நிச்சயித்துக்கொண்டான். மறுநாள் மத்யானம் வழக்கம்போல் ரத்னவதி விஹார் சென்றாள். அவ்வழியாய் வரும்போது அவள் தன் தாதிவீட்டுக்குப்போய் வந்துகொண்டிருந்தாள். அவள் காஷ்மீரச்சால்வையை தரித்திருப்பதைக் கண்டு பகல்திருடன் அவளை இரண்டு மூன்று தடவை நின்று ஏறஇறங்கப் பார்த்தான். தன் ப்ரியன் இரவில் திருடிக்கொண்டுவந்த விலையற்ற சால்வையைத் தன் தாதிக்குக்காண்பித்து வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்த ரத்னவதி, பகல்திருடன் தன்னை இரண்டுமூன்று முறை உற்றுப்பார்த்ததைக்கண்டு பயந்து வீட்டுக் கோடினாள். பகல்திருடனும் தன் விடுதிக்குச் சென்றான்.

வீட்டுக்குச்சென்ற ரத்னவதி ராத்திருடனைப் பார்த்து, 'நேற்று இந்தச் சால்வையைத் தரித்திருந்த வாலிபன் இன்றைக்கு நான் இதைப் போர்த்துக்கொண்டு என் செவிலித்தாய் வீட்டினின்று திரும்பி வந்துகொண்டிருக்கும்போது, என்னை ஏறஇறங்க மும்முறை விறைத்துப் பார்த்தான்' என்றாள். 'அப்படியானால் அவன் இன்றிரவு இந்தச் சால்வையைத் திருடவருவான் என்பது நிச்சயம். நாம் பத்ரமாய் வைக்க வேண்டும்' எனக்கூறி ராத்திருடன், ரத்னவதி ஆபரணங்களையெல்லாம் கழற்றி ஒருபெட்டியில் வைத்து, அவைகளுடன் அந்தச்சால்வையையும் வைத்துப் பெட்டியை மூடிப் படுக்கையறையில் ஒருபள்ளம் தோண்டி அதனுள் அதனை ஜாக்ரதையாகவைத்து, அதன்மேலே படுக்கையை விரித்து ரத்னவதியுடன் படுத்திருந்தான்.

ராத்ரி இரண்டு ஜாமமாயிற்று. அப்போது தகுந்த ஆயுதங்களுடன் பகல்திருடன் ரத்னவதி வீட்டுக்கு வந்து கன்னம்வைத்து உள்ளேப்ரவேசித்தான். அந்நேரம் ரத்னவதியும் ராத்திருடனும் நல்ல நித்திரையிலிருந்தார்கள். விலையற்ற நவரத்னங்களிழைத்த மஞ்சமிருக்க, அவர்களிருவரும் கீழே தரையில் படுக்கைவிரித்துப் படுத்திருப்பதைக் கண்டு, ஸங்கதிகளையெல்லாம் எளிதில் கிரஹித்துக்கொண்டான். சோரமண்டிகனாகிய பகல்திருடன் உடனே அதிக சாதுர்யமாக அவர்களுக்கு விழிப்பு வரவொட்டாமல் அப்படியே படுக்கையை நகர்த்திப் பெட்டியைத் திறந்து சால்வையைமாத்ரம் எடுத்துக்கொண்டு, யதாப்ரகாரம் அவர்களைப் பள்ளத்தின்மீது படுக்கவைத்துவிட்டு, தன் வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

காலையில் படுக்கைவிட்டெழுந்து ரத்னவதியும் ராத்திருடனும் அந்த வாலிபன் தமது சால்வையையாவது நகைகளையாவது அபகரிக்கவில்லையென்று ஸந்தோஷப்பட்டார்கள். 'நாம் தேர்ந்த கை; நமக்குமுன் எம்மாத்ரம் அந்தச் சிறுவாலிபன்' என்று கர்வங்கொண்டான் ராத்திருடன். பகல்திருடன் இன்னானென்று அறிந்திருந்தால், ராத்திருடன் இவ்வாறு மார்தட்டிப் பெருமைபேசியிருக்கமாட்டான். ரத்னவதி ஸ்நானம் செய்து அலங்காரம் செய்துகொள்ளும்பொருட்டுப் பெட்டியைத் திறந்துபார்க்கையில், சால்வை காணாததைக் கண்டு ப்ரமித்துப்போய்விட்டாள்; உடனே ராத்திருடனுக்கு ஸங்கதியைச் சொன்னாள் அவனும் அதைக்கேட்டு

அதிசயித்து, 'அந்தச் சிறுவன் என்னிலும் இந்த வேலையில் கைதேர்ந்தவன் போலிருக்கிறது. ஸரி, நான் அந்தச் சால்வையை எப்படியாவது கொண்டுவந்துவிடுகிறேன்' என்று அவளுக்கு ஸமாதானம் சொல்லியனுப்பிவிட்டான். ஆனாலும் அவனுக்கு மாத்ரம் தலை பிரக்கமாய்த்தானிருந்தது. என்னசெய்வது? காக்கையின் குஞ்சு பறக்குமேயொழிய எப்போதாவது தவழுமா?

அன்றைய சாயுங்காலம் பகல்திருடன் சால்வையைப் போட்டுக்கொண்டு ரத்னவதிவீடு பக்கமாய் உலாவப்போனான். வீட்டுத்தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்த ரத்னவதி அந்தச் சால்வையைப்பார்த்துத் தடாலென்று உள்ளே சென்று, 'நமது சால்வையைத் தரித்துக்கொண்டு அந்தச் சிறுவன் தெருவே போகிறான்' என்று ராத்திருடனிடம் சொன்னாள். உடனே எழுந்து ராத்திருடன் தெருவில்வந்து, அந்த வாலிபனைத் தொடர்ந்துசென்றான். ஊருக்கு வெளியே வந்ததும், அவன் பகல்திருடனைக் கைதட்டிக் கூப்பிட்டு உட்காரவைத்து, அவனுடன் ஸ்நேகம் செய்யத்தொடங்கினான். "இதற்குச் சற்றுப் பக்கங்களில் நல்ல கொழுத்த ஸௌகார்கள் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டில் கன்னம் வைத்துப் பொருள்சேர்த்து நான் இரண்டுபங்கும் நீ ஒரு பங்குமாகப் பங்கிட்டுக்கொள்ளலாம்" என்று ராத்திருடன் சொன்னான். பகல்திருடன், "இவ்வகையான வேலை என்னால் எப்போதும் ஆகாது. நீயே திருடவேண்டும். திருடுவதால் உண்டாகக்கூடிய சிக்ஷை தண்டனையெல்லாம் உனது பொறுப்பேயொழிய நான் சிறிதும் உட்படமாட்டேன். ஆனால், பங்குமட்டுமோ: உனக்கு ஒன்றரை, எனக்கு ஒன்று. இவைகளுக்கு நீ ஸம்மதித்தால் நான் உன்னுடன் வருவேன்" என்றான். ராத்திருடன் ஒத்துக்கொண்டான். அன்றிரவே சென்று, அவர்கள் அபாரதனம் கொள்ளையடித்துவந்து, முன்னே செய்துகொண்ட பேச்சுப்படிக்குப் பங்கிட்டுக்கொண்டார்கள்.

ராத்திருடனுக்குமாத்ரம் "நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டு, எத்தனையோ ஆபத்துகளுக்கீடாகி ப்ராணனைக் கையில் பிடித்துக்கொண்டு சென்று திருடிவந்தோம்; இவனொன்றும் செய்யவில்லை.; துரும்பெடுத்துத் துரும்புமேல் போடவில்லை.; கூடவந்தானும்; இவன் வந்ததால் மஹா கார்யலாபம். அந்தச்சாக்கை வைத்துக்கொண்டு ஏறக்குறைய ஸரிபங்கு அடித்துக்கொண்டுபோய்விட்டான்" என்று பகல்திருடன் மீது வயிற்றெரிச்சலாயிருந்தது. ஆனாலும், அவ்விஷயம் அப்போது வெளிவரக்கூடாதென்றும், எதாவது ஏற்ற சமயம் பார்த்துப் பையனை வேலைதீர்த்துவிட்டுச் சொத்தையெல்லாம் எடுத்துவந்துவிடலாம் என்றும் தீர்மானித்துக் கொண்டான். இப்படியிருக்கையில், மறுபடியும் ஒருநாள் ராத்திருடனும் பகல்திருடனும் ஸந்தித்து இன்னொருமுறை ராஸஞ்சாரம் செய்து த்ரவ்யம் கொண்டுவரவேண்டுமென்று நிச்சயஞ் செய்துகொண்டார்கள். ஆனால், பங்குவிஷயமாய் மாத்ரம் சிறிது வித்யாஸம் அவர்களுக்குள் ஏற்பட்டது. ராத்திருடன் பகல்பயலுக்கு ஒரு பங்கு கொடுக்க ஒத்துக்கொள்ளவில்லை. 'நான் இரண்டுபங்கு எடுத்துக்கொண்டு உனக்கு ஒரு பங்குதான் கொடுப்பேன்" என்று ராத்திருடன் சொல்ல, பகல்திருடன், "நீ என்ன என்னிலும் சிறந்தவன், இரண்டேன் உனக்கு?" எனக் கேட்டான். அதற்குமேல் ஒருவருடைய ஸாமர்த்யத்தையொருவர் அறியவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உடனே இருவரும் பரீக்ஷைக்கு ஸித்தமானார்கள்.

பக்கத்திலேயிருந்த பனைமரத்தின்மீதிருக்கும் காக்கையின் கூட்டைக் காண்பித்துப் பகல்திருடன், அதிலிருக்கும் முட்டைகளை அந்தக் காக்கைக்குத் தெரியாமல் எடுத்துவாவென ராத்திருடனுக்குச் சொன்னான். ராத்திருடனும் அப்படியேசென்று, மரத்தின்மேலேறிக் காக்கைக்குத்தெரியாமல் முட்டைகளை எடுத்து மடியில் வைத்துக்கொண்டான். இதற்குள் பகல்திருடன் மரமேறி ராத்திருடன் மடியிலிருந்த முட்டைகளை அவனுக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டு அவனுக்கு முன்னமாக

கீழே வந்துவிட்டான். ராத்திருடன் இறங்கி வந்து 'இதோ உன் காக்கைமுட்டை, பார்த்துக்கொள்' என்று மடியில் கையிட, அங்கே சூந்யமாயிருந்ததைக்கண்டு ப்ரமித்தான். உடனே பகல்திருடன் தான் செய்ததையெல்லாம் சொன்னான். பகல்திருடனுடைய அரிய ஸாமர்த்யத்தை அங்கீகரித்து, கிழவனான ராத்திருடன் அவனை இறுகத் தழுவிக்கொண்டு, 'அப்பா, உன்னைப் பார்த்தால் என் குமாரனெனத் தோன்றுகிறது. நிஜத்தைச் சொல்' எனக்கேட்டான். அதைக்கேட்டுப் பகல்திருடன், தன் தகப்பனுக்கு இத்தனை நாளாக இன்றைக்குத்தான் பூர்வ ஞாபகம் வந்ததென்று மகிழ்ச்சியடைந்து உண்மையை ஒளிக்காமல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். உடனே ராத்திருடன் அவனை ஆலிங்கனம் செய்துகொண்டு, 'அப்பா, கண்மணி, இந்த ஸங்கதியை ஏன் எனக்கு முதலிலேயே தெரிவிக்கவில்லை' எனக்கேட்க, அவன் 'என் அன்னை அனுப்பிய ஒற்றர்களைத் திரஸ்கரித்து அவர்களை விரட்டியோட்டிய நீ, நான் முதலிலேயே உன் குமாரன் என்று சொன்னால் நம்பமாட்டாயென்றும், என் ஸாமர்த்யத்தைக் காட்டி உன்னை மகிழ்வித்துப் பிறகே யதார்த்தத்தைச் சொல்லவேண்டுமென்றும் எண்ணியிருந்தேன்' என்று பதிலளித்தான். பிறகு ராத்திருடன் ரத்னவதிக்கு ஏராளமான த்ரவ்யம் கொடுத்து அவளிடம் விடைபெற்றுக்கொண்டு, மிகுந்த தனத்துடனும் பிள்ளையுடனும் தன்னூருக்குப் புறப்பட்டான்.

புருஷனும் பிள்ளையும் க்ஷேமமாய்த் திரும்பி வந்ததைக்கண்டு ஸுகுணவதி ஆனந்தபரவசமானாள். இனிக் கண்ணால்கூடக்காணப்போவதில்லையெனக் கைவிட்டத் தன் கணவனை க்ஷேமமாய்த் திரும்பியழைத்துவந்த தன் மகனை அவள் வாயார வாழ்த்தினாள். குமாரன் பட்ட கஷ்டங்களையெல்லாம் கேட்கக்கேட்க அவளுக்கு அடிவயிறு பகீல்பகீலென்றது; என்ன கஷ்டப்பட்டபோதிலும், கடைசியில் க்ஷேமமாய்த் திரும்பியதைக்கண்டு அக்கஷ்டங்களையெல்லாம் மறந்துவிட்டாள். ராத்திருடனும் தான் பதினாறு வருஷ காலமாய் அவர்களைத் திரஸ்காரம்செய்து அடியோடு மறந்திருந்ததற்காகத் தன்னை மன்னிக்கும்படி ஸுகுணவதியையும் மகனையும் கேட்டுக்கொண்டான்.

இப்படிப் போனவர்கள் மீண்ட களிப்பில் சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் கஜானாவை இன்னும் நிரப்பவேண்டுமென்று ஆசை ராத்திருடனுக்கு உண்டாயிற்று. வேறெந்த பொருளாயிருந்தாலும் அவை ஒவ்வொன்றிற்கும் ஓர் அளவு இருக்கிறது. அதாவது: இவ்வளவுமட்டும் கிடைத்தால் இனி அது சிறிதேனும் அவசியமில்லையென்ற ஒரு வரையறை ஏற்பட்டுவிடுகிறது. ஆனால், ஸகலவித ஐசுவர்யத்துக்கும் மூலகாரணமும் ராஜமார்க்கமுமாகிய பரமசக்தியுள்ள அந்தப் பணத்துவிஷயத்தில், ஆசையென்பதற்கு ஒரு முடிவுமில்லை, அந்தமுமில்லை. எவ்வளவு கிடைத்தாலும் இன்னுங்கொஞ்சம் கிடைக்காதோவென்றே ஜனங்கள் அனைவரும் ஏங்கி நிற்பார்கள். பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும். பணத்தாசை பிடித்தாடும் ராத்திருடன் இம்முறை அவ்வூர் மஹாராஜா அரமனையையே தனது உத்யோகஸ்தலமாகக் கொள்ள நினைத்தான். அது நன்மையற்றதென்றும் ஆபத்துக்கிடமென்றும், சோரத்துக்குச் சொந்த ஊர் அபாயகரமானதென்றும் ஸுகுணவதியும் பகல் திருடனுமாக எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்கள். தன்னைவிட ஸாமர்த்யவான் என்று தான் அங்கீகரித்த தன் மகனுடைய வார்த்தைகூட ராத்திருடன் புத்திக்கேறவில்லை. கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே. ராஜா வீட்டில்தான் கன்னம் வைப்பேனென்று ஒரே பிடியாய்ப் பிடித்தான். காலத்துக்கேற்ற புத்தி. மேலே செய்யக்கூடியது ஒன்றுமிராமையால், பகல்திருடன் தகப்பனுடன் அரமனை நோக்கிச் சென்றான்.

தகப்பனும் பிள்ளையுமாய்ச் சேர்ந்து ஏற்ற விடத்தில் கன்னமிட்டார்கள். அவர்களுக்கு எங்கேயும் யாதொரு வித அப்யந்தரமும் உண்டாகவில்லை. கன்ன வாயிலில் பிள்ளையை வைத்துவிட்டு ராத்திருடன் உள்ளே சென்றான்.

முதல் தடவையில் அகப்பட்ட குயிலைக் கொண்டுவந்து குமாரனிடம் கொடுத்துவிட்டு ராத்திருடன் மறுபடியும் உள்ளே சென்றான். இதற்குள் காவல்காரன் விழித்துக்கொண்டான்; உடனே 'திருடர்கள் திருடர்கள்' எனக் கத்தினான். அரமனையிலுள்ளோர் யாவரும் எழுந்துவிட்டார்கள். உடனே ராத்திருடன் கன்னவாயிலை நோக்கி ஓடிவந்தான். அவன் பின்னே இரண்டு வீரர்கள் துரத்திக்கொண்டு வந்தார்கள். ராத்திருடன் கன்ன வாயிலண்டை வந்துவிட்டான். அவர்களும் நெருங்கினார்கள். ராத்திருடன் கன்னவாயிலுக்குள் தலையை நுழைத்தான். வீரர்களிலொருவன் கத்தியை வீசினான்; தலைவேறு உடல்வேறு ஆய்விட்டது. வெளியே நின்றுகொண்டிருந்த பகல்திருடன் தலையைக் கையிலெடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். காவல்காரர்கள் விளக்குக் கொண்டு வந்து பார்க்கும்போது, முண்டம் மாத்ரமே அவ்விடம் விழுந்து கிடந்தது. அதனால் என்ன ப்ரயோஜனம்? ஆனாலும், முண்டத்தை ஜாக்ரதைப்படுத்தும்படி மஹாராஜா கட்டளையிட்டார். பகல்திருடன் வீடுசென்று தாயாரிடம் நடந்த வரலாற்றையெல்லாம் சொல்ல, அவள் ஓவென்று அலறியழுதாள். திருடன் பெண்சாதியென்பது அவளுக்கு இப்போது தலையிடித்தது.

மறுநாள் பகல்திருடன் டம்பமாய் அலங்காரஞ்செய்துகொண்டு ராஜஸபைக்குச் சென்றான். அப்போது மஹாராஜா ராத்ரி மாண்ட திருடனைப்பற்றி விசாரணை செய்துகொண்டிருந்தார். நல்ல சமயத்திற்கு வந்தோமென்று பகல்திருடன் ஒன்றும் தெரியாதவன்போல எல்லாவற்றையும் செவிகொடுத்து உன்னிப்பாய்க் கேட்டான். "திருடன் உள்ளூர் பேர்வழிதான்; வெளியூரானல்ல; ஆகையால், நீங்கள் முண்டத்தை ஒரு வண்டியில் போட்டுக்கொண்டு நகர முழுவதும் ஓட்டிக்கொண்டு போங்கள்; இந்த முண்டத்தைக்கண்டு எவர்கள் அழுகிறார்களோ அவர்களைப் பின்கட்டுப் பாரையாகக் கட்டிக்கொண்டு வாருங்கள்" என்று மஹாராஜா சேவகர்களுக்கு ஆஞ்ஞாபித்தார்கள். பகல்திருடன் வீடுபோய் ராஜா சொன்னதைத் தாயாரிடம் சொல்ல, அவள் "அப்பா, என் ஆருயிர்த்தலைவன் உடல் இந்த வீதி வழியாய்ப் போகும்போது நான் எப்படி அழாமலிருக்கமுடியும்" என்று அழுதாள். தாயார் சொன்னதைக் கேட்டுப் பகல்திருடன், இந்த சங்கடத்துக்கு என்ன செய்வதெனச் சற்று யோசித்து, பிறகு ஸுகுணவதியைப்பார்த்து, "அம்மா, நீ சொல்வது வாஸ்தவந்தான்; ஆனால், ஒன்று செய்வோம்; நாமிருவரும் பிச்சைக்கார் வேஷம் போட்டுக்கொள்வோம். நான் நமது தெருக்கோடியிலிருக்கும் முருங்க மரத்தின்மேல் ஏறிக்கொள்ளுகிறேன். நீ கீழே உட்கார்ந்து சமைத்துக்கொண்டிரு. நமது தகப்பனார் முண்டம் அந்த மரத்துக்குச் சரியாய் வரும்போது, நான் மரத்தினின்று கீழே அந்த வண்டியின்மேல் விழுகிறேன்; அப்போது நீ என்மேல் விழுந்து உனது துக்கந்தீர அழுதுவிடு" என்று சொன்னான். அவள் அதற்கு ஒத்துக்கொண்டாள்.

(இன்னும் வரும்.)

---

கணக்குப் பரிசோதனை 1 0 0
இது தஞ்சை கோ. நடேச ஐயர் இயற்றியது. இதில் எல்லாத் தொழில்களின் கணக்குக்களையும் பரிசோதிக்கும் பொது விதிகளும், இன்னும் முக்கியமான சில தொழில்களைப் பற்றிய முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன.

திருமலை ஸேதுபதி 0 8 0
அ. மாதவையா இயற்றியது.

இந்தியாவின் கோரிக்கைகள் 0 8 0
கே. விசுவநாதய்யர் மொழி பெயர்த்தது. இதில் காங்கிரஸ் கோரிக்கைகளும் இரண்டு ஸபைப் பிரதிநிதிகளால் டெல்லியில் இராஜப் பிரதிநிதியிடமும், இந்தியா மந்திரியிடமும் சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனமும் அடங்கியுள்ளன.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
இராயவேலூர், (தென்னிந்தியா.)

# Social Service.

## சமூக ஊழியம்.

சென்றவருஷம் டிஸம்பர் மாதம் கல்கத்தாவில் கூடிய எல்லா இந்தியா ஜனசமூக ஊழியக் காண்பரென்ஸுக்கு ஸ்ரீமான் காந்தி அக்கிராசனாதிபதியாகவிருந்து ஓர் அரிய பிரசங்கம் செய்தார். அதன் முக்கிய அம்சத்தை இந்தக் குறிப்பிடுகிறோம்.

சமூக ஊழியமானது நல்ல பலனைக் கொடுக்க வேண்டுமாயின், அது ஆடம்பரமில்லாமல் செய்யப்பட வேண்டும். நாம் சமூக ஊழியம் செய்யும்போது, புகழ்ச்சியினால் ஊழியத்தில் ஊழலும், இகழ்ச்சியினால் ஊழியத்தில் பின்வாங்குதலும் கூடாது. நாம் இதுவரையில் சமூக ஊழியத்தில் அலட்சியம் செய்துவிட்ட சில முக்கிய விஷயங்களை இங்குக் கவனிப்போம்.



எம். கே. காந்தி.

### ஆங்கிலபாஷைக்கு அடிமை.

ஜன ஸமூஹத்திற்கு நாம் செய்யவேண்டிய ஊழியம் என்னவென்பதை முதலில் உணர வேண்டும். நாம் ஸ்வாதினம்பெறவும் ஆங்கில பாஷையைக் கற்பதில் நம்மவர்களுக்கிருக்கும் மூடபுத்தியை ஒழிக்கவும் நாம் முயற்சி செய்ய வேண்டும். நமது கல்விச்சாலைகளில் நமக்கு ஆங்கிலத்தின் மூலமாகவே கல்வி போதிக்கப்படுகின்றது. இப்போது ஏறக்குறைய அதுவே தேசபாஷையாக வழங்கிவருகிறது. நமது சிறந்த யோசனைகளையெல்லாம் ஆங்கிலத்திலேயே நாம் வெளியிடுகிறோம். இன்னும் கொஞ்ச காலத்திற்குள், சில உயர்ந்த குடும்பங்களில், ஆங்கிலபாஷையே தாய்ப்பாஷையாய்விடுமென்று நமது செம்ஸ்போர்டு பிரபு அபிப்பிராயப்படுகிறார். ஆங்கிலக் கல்வியைக் கற்கவேண்டுமென்ற எண்ணத்திற்கு நாம் ஆளாய்விட்டோம். இதனால், ஜனஸமூக சேவைக்கு நாம் தகுதியற்றவர்களாய் விட்டோம். ஆங்கிலத்தின் மூலமே கல்விச்சாலைகளில் போதனை நடந்துவருவதால், நமது ஞானம் ஒதுங்கி மூலையில் கிடக்கிறது. பாமரர்களினின்று நாம் விலகிநிற்கிறோம்; நமது ஜாதியினரில் மேதாவிகளாயுள்ளவர்களின் ஞானம் பிறர்க்குப் பயன்படாதபடி கூண்டில் அடைபட்டுக்கிடக்கின்றது. நமக்குக் கிடைத்துள்ள புதிய உத்தேசங்களை நம்மிடமிருந்து ஜனசமூஹத்தினர் பெற்றுக்கொள்ள முடியவில்லை. விஷயங்களை உணர்ந்து ஒழுங்கு படித்துக்கொள்ளாமல் அன்னியவார்த்தைகளை மனப்பாடம் பண்ணுவதிலும், அவ்வார்த்தைகளின் உச்சரிப்பை கிரஹித்துக் கொள்வதிலும் சென்ற 60 வருஷங்களாக நாம் காலம்கழித்து வந்திருக்கிறோம். நமது பெற்றோர்களிடமிருந்து தெரிந்துகொண்ட விஷயங்களை கொண்டு மேன்

மேலும் நாம் அபிவிருத்தியடையாமல், தெரிந்துகொண்ட விஷயங்களை மறந்துவந்திருக்கிறோம்.

### தேசபாஷைகளைக் கைதூக்கிவிடவேண்டும்.

நாம் முதலாவதாகச் செய்யக்கூடிய சமூக ஊழியம் என்னவென்றால்: நமது தேசபாஷைகளைக் கைதூக்கி விடவேண்டும்; ஹிந்திபாஷையை ஜாதீய பாஷையாகச் செய்யவேண்டும். ஜாதீய சம்பந்தமான சகல காரியங்களையும் ஹிந்திபாஷையின் மூலமாகவே செய்யப்பார்க்கவேண்டும். தேசபாஷைகளின் மூலமாய்ப் போதனை நடக்கும்வரையில், நாம் நமது முயற்சியில் குன்றக்கூடாது. நமது சட்டசபைகளின் நடவடிக்கைகள் யாவும் தேசபாஷைகளிலேயே நடக்கும்படியான நற்காலம் சீக்கிரம் வரவேண்டும். சட்டசபை நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடைபெறுவதால், அவற்றை நமது சமூகத்தினர் உணர்ந்துகொள்ள முடியாமலிருக்கின்றார்கள். மேதாவிகளுக்குப் பிறப்பிடமாயுள்ள இப்புராதன தேசத்திலே கவிசிரேஷ்டரான தாகோரும், சாஸ்திர விற்பன்னரான வஸுவும், ரஸாயன ஞானியான ராயும் ஜனித்திருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. எனினும், அத்தகைய கல்விமான்கள் வெகு சிலரேயிருப்பது மிகவும் வியசனிக்கத்தக்கது. தேசபாஷையைப் பற்றிய விஷயமானது சமூகஊழியத்தின் ஓர் அம்சமாகுமோவென்று நீங்கள் எண்ணலாம். நமது கல்விமுறையில் தேசபாஷைகள் மிகவும் அலட்சியம் செய்யப்பட்டிருப்பதால், இதனால், ஜாதீய முயற்சிகள் பலவும் தடைப்படுகின்றன. இக்காரணம்பற்றியே தேசபாஷையைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்ல முன்வந்தது.

### ஜனங்கள் நோய்க்கு இரையாதல்.

ஜனங்களுக்குத் துன்பம் வருங்காலத்தில், அவர்களுக்கு ஊழியம் புரிதலே மிகவும் மேன்மையானது. 1914-ம் வருஷத்தில் காலரா, ப்ளேக், ஜ்வரம் ஆகிய இவற்றால் 46,39,663 பேர்கள் மாண்டுபோயினர். இவ்வளவு பேர்களும், இப்போது நடக்கும் யுத்தத்தில் மாண்டிருந்தால் நமக்குக் கியாதி கிடைத்திருக்கும். ஆனால், இவர்கள் நோய்க்கு இரையானதால், நமக்கு அபகீர்த்தியே கிடைத்தது. மேற்கூறிய நோய்களைப் போக்க ஆங்கிலேயர்கள் பல முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். ஆனால், அவர்கள் கைக்கொள்ளும் முறைகள் மிகுந்த பணச்செலவுள்ளவையாயிருக்கின்றன. ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் விரிவான வேற்றுமைகள் இருப்பதால், ஆங்கிலேயர்கள் அவற்றை உணராமல், மேனாட்டிற்கு ஏற்ற முறைகளில் முயன்றிருக்கிறார்களேயன்றி நமது தேசத்திற்கு ஏற்ற முறையில் முயலவில்லை.

### நமது முயற்சி.

வைத்தியத்தில் கைதேர்ந்த ஆறுபேர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு காலரா, ப்ளேக், ஜ்வரம், ஆகிய இம்மூன்றையும் நிவர்த்திக்க முயன்றால், தக்க பலன் ஏற்படுமென்பதில் ஆக்ஷேபனையில்லை. இந்நோய்களை வரவொட்டாமல் தடுப்பதுதான் மிகவும் சிலாக்கியமான காரியம். இவற்றைப்பற்றிய விஷயங்களைப் பொதுஜனங்களுக்குத் தெளிவாக நாம் எடுத்துரைக்கவேண்டும். இவற்றை அவர்கள் பின்பற்றுவார்களென்பதில் ஐயமில்லை. இவ்விஷயங்களில் கவர்ன்மெண்டார் நமக்கு வழிகாட்டவேண்டுமென்று நாம் எண்ணுவது தவறு; நாம் முயற்சி செய்வோமானால் அவர்கள் நம்மைப் பின்பற்றி நடப்பார்கள்; தவிரவும், நமக்கு ஆதரவும் அளிப்பார்கள். இவ்விஷயமாய் ஜனசமூக ஊழியம் செய்ய மிக்க இடம் உள்ளது.

கிராமாந்தரங்களிலுள்ள நிலைமைகளை நேரில் உணர்ந்து, அந்நிலைமைகளைப் போக்குவதற்கு இன்னின்ன வழிகளைத் தேடவேண்டுமென்று யோசனை சொல்வதற்காக ஆறு டாக்டர்களடங்கிய ஒரு கமிட்டியை இக்கான்பரென்ஸ் நியமிக்கலாம். அவ்வாறு அக்கமிட்டிகள் யோசனை சொன்னால், ஜனஸமூக உழைப்பாளிகளுக்கும் ஜனங்களுக்கும் மிகவும் அநுகூலமாயிருக்கும்.

### ரெயில்வே பிரயாணிகள்.

ரெயில்வேயில் மூன்றாவது வகுப்புப்பிரயாணிகள் படும் கஷ்டங்கள் சொல்லத்தரமல்ல. ஆக

லால், ஜன சமூக ஊழியர் ஒவ்வொருவரும் அப்பிரயாணிகளுக்குப்பரிஹாரம் கிடைக்கும்படி முயன்று தக்க ஊழியம் புரியலாம். அவர்கள் படும் கஷ்டங்களைப் பார்க்க என்மனம் கரைகின்றது. பல தடவைகளில் நான் அவர்களுடனிருந்து, அவர்களின் கஷ்டங்களைக் கண்டிருக்கிறேன். நம் தேசத்திலுள்ள ஜனங்களில், லட்சக்கணக்கான ஏழைகள் அவ்விதம் கஷ்டப்படுகின்றனர். அந்த அசௌகரியத்தையும், அவமதிப்பையும் போக்காமல் நாம் சகித்துவருவதால், நமது ஜாதியார் க்ஷீணித்து வருகின்றனர். ரெயில் வண்டிகளிலே அவர்கள் படும்பாட்டை என்னென்று கூறுவது: வண்டிகளிலே இடம் கிடைப்பதற்காகப் பைத்தியம்பிடித்த நாயைப்போல ஓலமிடுகின்றனர்; நிற்பதற்கு இடம் கிடைப்பதற்குமுன், எனக்கு இங்கே நிற்க இடம் கிடைத்தால் போதுமென்று சத்தியம் செய்கின்றனர்; இடம் கிடைக்காது போயின், பிறரைச் சபிக்கின்றனர்; பிரயாணகால முழுவதிலும் அழுக்கில் மூழ்கிக் கிடக்கின்றனர்; நாய்கள் ஆகாரம் பெறுவதுபோல ஆகாரம் பெற்று உண்கின்றனர்; தங்களைவிட சரீரபலம் வாய்ந்தவர்களைக் கண்டு நடுங்குகின்றனர்; இரவு பகலாக உட்கார்ந்தவண்ணமாகவே தூங்குகின்றனர். இப்படியெல்லாம் அவர்கள் சொல்லவொண்ணாத கஷ்டங்களை அடைவதனால், அவர்களுக்கு மானக்கேட்டைத் தவிர வேறு என்ன கிடைக்கின்றது?

## ஊழியம் புரியும் மார்க்கம்.

முரட்டு ஜாதியாரான காபூலியர்கள், ஜனங்கள் மிக்க நெருக்கமுள்ள அறைகளிலும் நுழைந்து ஆஸனங்களில் படுத்துக்கொண்டுவிடுகிறார்கள். வலியற்ற ஏழை ஜனங்களுக்கு அவர்களை எதிர்க்கச் சக்தி போதாது. இச்சமயங்களில் கற்றோராகிய நாம், ஜனங்களை இக்கஷ்டங்களினின்று விடுவிக்கவேண்டும். இல்லையேல், ஜனங்களுடைய பிரதிநிதிகளென்றாவது, அல்லது, அவர்களுக்கு வழிகாட்டுவதாகவாவது நாம் சொல்லிக்கொள்ளக்கூடாது.

## தாழ்ந்தோரைக் கைதூக்கிவிடவேண்டும்.

தாழ்ந்தோரைக் கைதூக்கி விடவேண்டிய விஷயம் மிகவும் முக்கியமானது. அவர்களை கைதூக்கி விடுவோமானால், ஹிந்து மதத்திற்கு ஏற்பட்டிருக்கிற ஒரு பழியை நீக்கினவர்களாவோம். அவர்களுக்குப் பள்ளிக்கூடம் மாத்திரம் வைத்துவிட்டால் போதாது. பாமர ஜனங்களும் வைதிகர்களும் அவர்களிடத்தில் கொண்டிருக்கும் மனோபாவத்தை மாற்றவேண்டும். அவர்களுக்குப் புரியக்கூடிய பாஷையில் நாம் பேசினால்தான், அவர்கள் அவற்றை அங்கீகாரம் செய்யக்கூடும். நீங்கள் இங்கிலீஷ் பாஷையில் இருந்துகொண்டு ஒன்றும் செய்யமுடியாது. ஹிந்து தர்மத்தை அநுசரித்துத்தான் நடக்கவேண்டும். தபஸ் செய்யவேண்டும். விவேகத்துடன் நாம் வைதீக நெறியைக் கடைப்பிடித்தொழுகி, அசட்டு வைதிகத்தை எதிர்க்கவேண்டும்.

## ஆத்மஞானமின்மை.

நமக்கு வரவர தர்மத்தினிடத்தில் நம்பிக்கை குறைந்துபோய்விட்டது. ஸத்யம், அஹிம்சை, பிரம்மசாரியம் ஆகிய தர்மங்களில் நம்முடைய பெரியோர்களுக்கிருந்த திடபுத்தி நமக்கு இல்லை. அவைகளைக் கைக்கொண்டு ஒழுகுவோமானால், அவை நம்மை நல்ல கதியில் கொண்டுவரும் என்ற நம்பிக்கையும் நமக்கில்லை. சௌகரியத்தை உத்தேசித்து அவைகளைக் கைக்கொண்டு ஒழுகலாமென்றும், அவசியமேற்பட்டால் அவைகளை விட்டுவிடலாமென்றும் நாம் நினைக்கிறோம். ஆகையால், நம்முடைய பழைய தர்மபுத்தி நமக்கு மறுபடியும் உண்டாகும்படி எவன் ஒருவன் செய்வானோ, அவனே ஜனோபகாரியாவான். அத்தகைய ஒரு குருஸ்வாமி வரக்கூடியதை எதிர்பார்த்து நம்மாலானவரையில் நாம் வழியை ஒக்கப்பண்ணிக் கொண்டிருக்கலாம்.

## செல்வவான்கள் செய்வது என்ன?

இனி நாம் வகுப்புக்களைப் பற்றிக் கவனிப்போம். நம்முடைய மகாராஜாக்களும், செல்வ

வான்களும் வீண் தமாஷ்களிலும் குடியிலும் திரவியத்தைச் செலவழித்துவிடுகிறார்கள். குடியைப்போல் கொக்கெய்ன் தின்னும் வழக்கம் விருத்தியாகிவருவதாக நான் அறிகிறேன். ஜனங்களுள் பத்தில் ஒன்பது பட்டினியால் வாடும்பொழுது நமக்கு வேஷக் என்ன வேண்டியிருக்கிறது? பெரிய அந்தஸ்தில் உள்ளவர்களுடைய துர்வழக்கங்களை மாற்ற நாம் முயற்சி செய்வது சிரமமாய்த்தானிருக்கும். ஆயினும், நாம் பிரயத்தினம் செய்யாமல் இருக்கக்கூடாது.

ஸ்திரீகளின் நிலைமை.

ஹிந்து முகம்மதிய ஸ்திரீகளின் நிலைமையானது அவசியம் கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும். படிப்பு சொல்லிக்கொடுத்து ஸ்திரீகள் விடுதலைபெறும்படி செய்துவிட முடியாது. புருஷர்கள் அவர்களிடத்தில் கொண்டிருக்கிற மனோபாவம் மாறி அதற்குத் தகுந்தாற்போல் நடக்கவேண்டும். ஸ்திரீகளுக்குக் கல்வி அவசியமே. அது விடுதலைக்குப் பிறகு வரவேண்டும். எழுதப்படிக்கத் தெரியாமலே, நமது ஸ்திரீகள், வேறு எத்தேச ஸ்திரீகளுக்கும் சமமான விவேகமுள்ளவர்களா யிருக்கிறார்கள். அந்தந்த ஸ்திரீயின் கணவன் இஷ்டப்பட்டால், ஸ்திரீகள் உயர்த்துவிடுவார்கள்.

பிராணி ஹிம்சை.

எலும்பு புறப்பட்ட மாடுகள் வயல்களில் கட்டி உழப்படுவதைப் பார்க்க என் மனம் பதறுகிறது. நமது கால்நடைகளை விருத்தி செய்து அவைகளுக்கு ஹிம்சை செய்யப்படாமலும், அவை கொல்லப்படாமலும் காப்பாற்றுவோமானால் நம்முடைய தரித்திரம் பாதி நீங்கிவிடும். பசுவை சம்ரக்ஷிக்கவேண்டியதானது நம்முடைய ஐசுவரியத்தை விருத்தி செய்வதற்குள்ள வழியாகும். கட்டாயப்படுத்தி எதையும் செய்துவிட முடியாது. பசுக்கள் கொல்லப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நமது ஆங்கில சிநேகிதர்களையும் முகம்மதிய சிநேகிதர்களையும் நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.—“ஸ்வதேசமித்திர” னின்று சுருக்கி எழுதப்பட்டது.

---

## The Lost Will

BY MR. M. S. KRISHNASAWMY IYER.
*Author of Stolen Bride, Power of Love etc.*

## காணாமற்போன மரணசாஸனம்.

### 1-ம் அத்தியாயம்.

சங்கரய்யர் படுக்கையில் படுத்துப் புரண்டுகொண்டு சிறிது பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தார். அவர் மனைவி ஸுந்தரம்மாள் அவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவருக்கு உபசாரங்கள் செய்துகொண்டிருந்தாள். அவர்கள் இருந்த இடம் அவருடைய வீட்டில் மேல்மெத்தையில் ஒரு அறையாகும். அறையின் சுவர்களிலெல்லாம் பற்பல விதமான படங்களும் தேதிப்படங்களும் நிறைந்திருந்தன. ஸுந்தரம்மாள் புருஷன் கஷ்டப்படுவதைப்பார்த்து மனம் சகிக்காமல் கண்ணீர்விடுவதும், சங்கரய்யர் தன்னைப் பார்த்துவிட்டால் என்செய்வதென்று அவரறியாமல் கண்ணீரைத் துடைப்பதும், துக்கத்தையாற்ற அடிக்கடி சுவர்களிலுள்ள தேவப்படங்களைப் பார்ப்பதுமாயிருந்தாள். சங்கரய்யர் அடிக்கடி ஏதோ முணுமுணுத்துக்கொண்டு ஒரு நிலையாய்ப் படுத்திராமல் பல தடவையும் புரண்டுகொடுத்து வந்தார்.

“நீலகண்டன் எங்கே! அவன் பழையது சாப்பிட்டாயிற்றோ?” என்றார் சங்கரய்யர்.

“சாப்பிட்டிருப்பான். அவன் காரியமெல்லாம் ஆனபிறகுதானே அவனுக்கும் பார்வதிக்கும் பழையது போடவேண்டும்? சாப்பிட்டுக்

கொண்டிருக்கிறானே, என்னவோ? அவனைக் கூப்பிடட்டுமா?"

"கூப்பிடு. அவன் சதா என்னிடமிருந்தால் தேவலைப்போலிருக்கிறது. சாகப்போகிற ஸமயத்தில் சங்கரா சங்கரா என்பது போல—"

"அப்படிப் பேசாதேயுங்களேன். எனக்கு வருத்தமாயிருக்கிறது. எதுவும் பிராப்தம் போலத்தானே நடக்கும். பழங்கதையை நினைத்துத் துக்கப்படுவதில் பிரயோஜனமென்ன. துக்கந்தானே அதிகமாகிறது. இத்தனை நாள் எப்படியாயினும் போகட்டும். இப்போது நீங்கள் மனம் மாறியிருப்பதே எங்களுக்கு பெரியதல்லவா. அதனால் நாங்கள் ஸந்தோஷிக்கிறோம். ஸந்தோஷத்தில் துக்கத்தை நினைப்பானேன். சுவாமி கிருபையால் உடம்பு ஸௌக்கியமாகி விட்டால், முன் எப்படியிருந்தாலென்ன. இனிமேல் யாதொரு மனஸ் ஸஞ்சலமில்லாமல் இருக்கலாம்" என்றாள் ஸுந்தரம்மாள்.

சங்கரய்யர் தமது மனைவி பேசுவதைக் கேட்டுக்கொண்டே கண்ணை மூடிக்கொண்டார். ஸுந்தரம்மாள் பேசுவதை நிறுத்தினபிறகு அவர் கண்மூடியபடியே ஆலோசனையிலாழ்ந்தார். ஸுந்தரம்மாள் தான் பேச்சுக்கொடுத்ததால் அவர் களைப்படைந்துவிட்டார் என்று எண்ணி அவரை தொந்தரவு செய்யக்கூடாதென்று தீர்மானித்து, உடனே எழுந்து தனது குமாரனைக்கூப்பிடப் புறப்பட்டாள். சங்கரய்யர் உடனே கண்ணை விழித்துக்கொண்டு, "ஏன் எழுந்திருக்கிறாய்; எங்கும்போகாதே; எனக்கு சிரமமாயிருக்கிறது; உனது மடியில் சற்றுத் தலைவைத்துக்கொள்ளுகிறேன்; ஏதாவது காரியமிருந்தால் பிறகு பார்த்துக்கொள்" என்றார்.

ஸுந்தரம்மாள் தனது கணவனுடைய தலையைத் தனது மடிமேல் வைத்துக்கொண்டு ஒரு கையால் அதை யணைத்து மற்றொரு கையால் அவரது கைகளை மெதுவாகப் பிடித்துவிட்டாள். அப்போது அவர்களுடைய மகன் நீலகண்டன் வேகமாய் ஓடிவந்து, "அம்மா மாமா வரவில்லை. ஸ்டேஷனிலிருந்து எல்லாரும் வந்துவிட்டார்கள். எதிராளாத்து ஸுப்பய்யர் கூடச் சொன்னார் மாமாவை ஸ்டேஷனில் பார்க்கவில்லை என்று. அவர் வண்டிதான் கடைசியாக வந்தது. மாமா நாளைக்கு வாராரோ என்னவோ?" என்றான்.

சங்கரய்யர் கண்ணை விழித்துப்பையன் சொன்னவற்றைக் கவனித்துக்கேட்டார். பையன் தாயைப் பார்த்துக்கொண்டிருந்தானேயன்றி, தன் தந்தையைக்கவனிக்கவேயில்லை; அவள் பேசுவதையே எதிர்பார்த்திருந்தான். சங்கரய்யர் பெருமூச்செறிந்தார். பையனை எறிட்டுப் பார்த்தார். "ஆஹா! இவ்வளவு வனப்புவாய்ந்த புத்திரனைப் புறக்கணித்தோமே" என மனங் கசிந்தார். அழகிய கூந்தல் கட்டவிழ்ந்து தோளிலும் மார்பிலும் புரண்டு உடலின் அழகை அதிகரிக்கச் செய்யக்கண்ட இவருக்கு, அவன்பால் உண்டான அன்புக்கு ஓர் அளவில்லை. அவனை சிலநாட்களாக அவர்பார்த்ததுண்டென்றாலும், அக்காலம் அவர் வியாதியால் மெலிந்து, இயற்கை யழகையும் செயற்கை யழகையும் பார்த்து ஆனந்திக்கமுடியாத நிலைமையிலிருந்ததால், தன் மகன்மேல் அன்புகொள்ள இடமில்லாமற் போயிற்று.

சங்கரய்யர் சற்று யோசித்தார். இதுகாறும் புறக்கணிக்கப்பட்டுவந்த பையனை இப்போது கூப்பிட்டால் எங்கு அவன் தன்னிடம் வர ஸம்மதியானோ என்றுஎண்ணினார். அன்றி வரினும், அவன் தம்புடன் தாராளமாய் நெருங்கிப் பழகி, விளையாடிப் பேசுவானோ எனஐயமுற்றார். அன்றியும், விளையாட்டு ஞாபகத்தால் தனது தகப்பன் செய்த கொடுமைகளை மறந்திருக்கக் கூடிய பையன், இப்போது அவைகளை நினைவிற்கொண்டு தம்மேல் வெறுப்புக் காட்டவுங் கூடும். இவ்விதம் பலவாறு சிந்தித்தவராய் ஒன்றுந் தோன்றாமல் பலபடி கண்ணை மூடிக்கொண்டார்.

இதற்குள் ஸுந்தரம்மாள் பையன் சொல்லியவற்றிற்கு விடையாக "இன்றைக்கு வராவிட்டால் நாளைக்கு வருகிறான். ஒழியவில்லை

போலிருக்கு. நீ சாப்பிட்டாயிற்றோ? பார்வதியும் சாப்பிட்டாயிற்றோ? சித்தி ஆற்றுக்குப் போயிருக்கிறாளா?" என்று கேட்டாள். "இப்பொழுதுதானம்மா சாப்பிட்டேன் நானும் பார்வதியும். சித்திசாதம்போட்டுவிட்டு காவேரிக்குப் போய்விட்டாள். பார்வதிதான் எச்சிலெடுத்து சுத்திசெய்தாள். ஏனம்மா, வேப்பிலைக்கட்டி இவ்வாத்திலே பண்ணியிருக்கிறது நன்றாயிருக்கிறதே! அதுமாதிரி நம்மாத்திலேயும் பண்ணுகிறதுதானே? வேப்பிலைக்கட்டியென்று கேட்டிருக்கிறேன்; இன்றைக்குத்தான் தின்றேன். பழையசாதத்துக்கு அந்த ஊறுகாய் நன்றாயிருக்கிறது. ஆனால், பேர்தான் வேப்பிலைக்கட்டி; கொஞ்சங்கூடக் கசக்கவில்லை.

இப்பேச்சால் சங்கரய்யர் இன்னும் மனங்கலங்கினார். அவன் வீடு எது? இந்த வீடு (பையன் தற்போது தங்கியிருக்கும்வீடு) தன் தந்தை வீடாயிருக்க, "இவாத்திலே" யென்று வித்தியாசமாய்ச் சொல்லுவானேன், தாம் இதுகாறும் செய்துவந்த செய்கைகளாலும் நடத்தையாலுமன்றோ நீலகண்டன் இவ்விதம் எண்ணிவருகிறான். அவன் மனத்தை எப்படியாவது மாற்றி தம்மேல் அன்புகொள்ளும்படி செய்யவேண்டுமென்றெண்ணி சங்கரய்யர் தமது கண்ணைத்திறந்து பையன் பக்கம் திரும்பி, "நீலகண்டா! இங்கேவா; உட்கார்; சித்தி நிறைய சாதம் போட்டாளா?" என்றார். நீலகண்டன் "ஆம், போட்டாள்" என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்தான். உடனே ஸுந்தரம்மாள் "ஏண்டா உட்காரேன், இப்படியுட்கார்" என்றுசொல்லி அவனை தன் கணவனண்டை உட்காரவைத்தாள்.

அதற்குள் பார்வதியென்ற சிறு பெண்ணும் அவ்விடம் வந்து "அத்தான், இங்கே எங்கே வந்தாய்? நான் உன்னை எங்கெங்கெல்லாமோ தேடினேனே. பூனையாட்டமா இங்கேவந்து அப்பாகிட்ட உட்கார்ந்துகொண்டாயே" என்று சொல்லிக்கொண்டு, "அத்திம்பேரே, இவன் விளையாடரேன் என்று சொல்லிக்கொண்டே இங்கேவந்துவிட்டான். நான் எத்தனைநாழி சோழியை வைத்துக்கொண்டு காத்துக்கொண்டிருக்கிறது" என்று நீலகண்டன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

சங்கரய்யர்:-"சரி உட்கார்" என்று பார்வதிக்கு பதிலளித்துவிட்டுப் பையனைப்பார்த்து "நீலகண்டா, பழையது சாப்பிட்டாயா; சித்தி சரியாய்ப் போட்டாளா? அவள் உன்மேல் பிரியமாயிருக்கிறாளா?" என்றுகேட்டார்.

நீலகண்டன் உடனே, "பழையது சாப்பிட்டேன். சரியாய்ப் போடாமலென்ன? என்மேல் பிரியமாய்த்தானிருக்கிறாள்" என்றான். உடனே பார்வதி "உன்மேல் பிரியமா? அத்தை எனக்குத்தானே இரண்டுகட்டித் தயிர் வார்த்தாள். உனக்கு ஒருகட்டிதானே போட்டாள். நீ இல்லாதபோது உன்னை வைகிறது உனக்கு என்னதெரியும்? நான் இதெல்லாம் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறேன். என்னைக்கூட உன்னுடன் விளையாடாதே என்கிறாளே" என்றாள்.

ஸுந்தரம்மாள்.—அடி பார்வதி. இல்லாததையெல்லாம் இட்டுக்கட்டிச் சொல்லாதே. நீ சிறு பெண். உனக்கு என்ன தெரியும். ஏதோ கோபவேளையில் அவனை ஏதாவது சொல்லியிருந்தால், அதையெல்லாம் ஏன் இங்கே சொல்லுகிறாய். ஒரு கட்டித்தயிர் போட்டால் என்ன, இரண்டுகட்டித் தயிர் போட்டாலென்ன? இதையெல்லாமாவந்து கோள் சொல்லுகிறது."

"மாமி, உங்களுக்கு என்னதெரியும். நீங்கள் இந்த அறையுண்டு என்றிருக்கிறீர்கள். எங்க அத்தை வம்பளக்கிறது எனக்கல்லவா தெரியும். அதெல்லாம் போகட்டும், நீலகண்டனை வைவானேன். எல்லாரிடத்திலும் அப்படியே வைது கொண்டிருக்கிறாள்.

சங்கரய்யர்.—என்ன வைகிறாள்?

பார்.—"என்ன வைகிறாள். திங்காத்துக்கு வந்துவிட்டான். சொத்தை அடித்துக்கொண்டுபோக வந்துவிட்டான். இத்தனைநாளாக இருந்ததுபோல் மாமாவாமென்றிருக்கிறதுதானே.

சாகக்கிடக்கிற பிராமணனைக் கழுத்தறுத்து ஏதாவது ஸொத்து வாங்கிக்கலாமென்றுதானே இங்கே வந்திருக்கிறாள்" என்று என்னென்னவோ சொல்லுகிறாள்.

சங்.—"இவ்வளவு கெட்டவளென்று எனக்கு முன்னாலேயே தெரியாமல் போயிற்று. என்னசெய்கிறது. போனதைப்பற்றி விசாரப்படுவதில் பிரயோஜனமென்ன? இத்தனை நாள் உங்களையெல்லாம் கஷ்டப்படுத்தினேன். போகிறது, இப்போதாவது உங்கள் குணம் தெரிந்து உங்களை வரவழைத்தேனே. இனிமேல் நீங்கள் அங்கே போகவேண்டாம். இங்கேயே இருங்கள்.

பார்:—"இவர்கள் இங்கேயே இருந்தால் இன்னும் கஷ்டப்படவேண்டியதுதான். நான்கூட சீக்ரம் ஊருக்குப் போகலாமென்றிருக்கிறேன். எங்கப்பாவுக்குக் கடுதாசி போட்டு என்னைக் கூட்டிக்கொண்டுபோகச் சொல்லவேண்டும். நீலகண்டா! எங்கூருக்கு வாயேன்; எங்கம்மா ரொம்ப பிரியமாயிருப்பாள்; அத்தை மாதிரி கடுகடுத்துக்கொண்டிருக்கமாட்டாள்."

ஸுந்தராம்மாள் இவர்கள் பேசுவதைக் கவனித்துக்கொண்டு, தனது புத்திரன் நிலைமையையும் தனது சக்களத்தியின் குணத்தையையும்பற்றி சிந்திக்கலானாள். பார்வதியின்மேல் அவளுக்கு ஒருவித பிரியம் ஜனித்தது. அவள் வெகுளியாய் எல்லாரோடும் பேசுவது அவளுக்கு இன்பங்கொடுத்தது. இப்படிப்பட்ட பெண் தனக்கு இல்லாததைப்பற்றி வருத்தப்பட்டாள்.

சங்கரய்யரும் சற்றுநேரம் ஆலோசனையிலாழ்ந்தார். தமது புத்திரனையும், பார்வதியையும் பார்த்துக்கொண்டே சிந்தித்துக்கொண்டிருந்தார். பார்வதியோ நீலகண்டன்மேல் சாய்ந்துகொண்டு அவன் கழுத்தில் கையைப் போட்டு வளைத்துக்கொண்டு, "ஏய், நீலா, நீ இப்போ விளையாடவருகிறாயா? இல்லையா? சித்தி வருவதற்குள் நாலைந்தாட்டமாவது ஆடவேண்டும்; பல்லாங்குழியில் எல்லா சோழிகளையும் சரியாய்ப் போட்டுவைத்திருக்கிறேன், நாம் போகலாமா?" என்று கேட்டாள், "சற்று இரு; பிறகு போகலாம்" என்றான் நீலகண்டன். "சித்தி வந்துவிட்டால் உனக்கு வசவுதான். நாம்பள் இங்கேவந்து ஆடலாமா. பல்லாங்குழியை இங்கே கொண்டுவரட்டுமா?" என்றாள் பார்வதி.

இவர்கள் இருவரையும் கவனித்துக்கொண்டிருந்த சங்கரய்யருக்குத் தமது பழையநாளைய சிந்தனையெல்லாம் மனத்தில் தோன்றின. தானும் தமது முதல் மனைவியும் ஒத்திருந்தகாலத்தில் அவளும் பார்வதியைப்போல் தம்முடன் விளையாடியிருந்ததுண்டென்பது நினைவிற்கு வந்தது. இருவரையும் பார்த்தார். அன்புகொண்டு பிரியாத ஸதிபதிகள் இருவரைப்போல் தோன்றினார்கள். இவர்களிருவருக்கும் கல்யாணம் செய்துவிட்டால், எப்போதும் இவர்கள் ஸந்தோஷமாயிருக்கலாமேயென்று எண்ணி, தமது மனைவி முகத்தை நோக்கி மெதுவாய், "இவர்களைப் பார்த்தாயா? இரண்டு பேருக்கும் கல்யாணம் செய்து வைத்துவிட்டால், எவ்வளவு நன்றாயிருக்கும். இவர்களிருப்பதைப் பார்த்தவுடன்-" என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் விட்டார்; துக்கிக்கலானார். சொல்லப்போகிறது இன்னவென்று அறிந்துகொண்ட ஸுந்தராம்மாள், "பழையகதைகளைப்பற்றி நினைப்பதில் பிரயோஜனமென்ன. உடம்பு சொஸ்தமாகிவிட்டால் அதுவே எனக்குப் போதும். அப்புறம் உங்கள் பிரியம் எங்கேபோயிற்று. நம்முடைய காலம் ஆகிவிட்டது. இனிமேல் குழந்தைகள் ஸந்தோஷமாயிருக்கப் பார்க்கவேண்டியதுதான். கல்யாணமானால் நன்றாயிருக்குந்தான். உங்கள் மச்சினர் ஸம்மதிப்பாரா? அவர் ஒன்றும் வேண்டாமென்று சொல்லாதிருக்கவேணுமே." என்றாள்.

"எல்லாம் ஈச்வராக்ஞைப்போல் நடக்கும்" என்று சொல்லிவிட்டு, சிரமமாயிருக்கிறதென்று கண்ணை மூடிக்கொண்டார்.

(தொடரும்.)

எம். எஸ். கிருஷ்ணஸாமி அய்யர்.

# The Progress of the world.

# பிரபஞ்சப் போக்கு.

## டாக்டர் ஸால்டரும், தாய்ப்பாஷையும்.

சிலருக்குத் தாய்ப்பாஷையில் பேசவேண்டுமென்றால் மிகவும் கஷ்டம். சிலர் ஆங்கிலபாஷையில் பேசினால்தான் பெருமையென்று கருதுகிறார்கள். ஆனால், கல்கத்தா யூனிவர்ஸிடி கமிஷன் தலைவராய் வந்திருக்கும் டாக்டர் ஸால்டர் தாய்ப்பாஷையைப்பற்றி என்ன சொல்லுகிறார் என்பதை இங்குக் குறிப்பிடுவோம்.

“ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தமது தாய்ப்பாஷையை நன்கு படித்துணரவும், பேசவும் தெரிந்திருக்கவேண்டியது அவசியமே. தாய்ப்பாஷையில் பேசினால்தான் விஷயங்களைத் தெளிவாகவும், திருத்தமாகவும், இலகுவாகவும் எடுத்துச்சொல்லமுடியும். ஆகவே, சிறுவர் சிறுமிகளைத் தாய்ப்பாஷையில் நன்கு பழகச் செய்வதே கல்வியின் முக்கியாம்சமாக இருக்கவேண்டும்.” இவ்வாறு டாக்டர் ஸால்டர் சொல்லியிருப்பதை நாம் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.

## படுக்கையில் படுத்துக்கொண்டே படிப்பதால் வரும் தீங்கு.

இவ்விஷயமாய் “வைத்திய கலாநிதி”யில் பின்வரும் விஷயம் காணப்படுகின்றது.

படுக்கையில் படுத்துக்கொண்டே படிப்பவர்கள் சாதாரணமாகச் செய்யும் வழக்கம் என்னவென்றால், வலது முழங்கையைப் படுக்கையிலாவது தலையணையில் ஊன்றி, அவ்வலது கையில் தலையைச் சாய்த்து அமர்த்திக்கொண்டு, இடது கையில் புஸ்தகத்தை ஏந்தியவாறு சாய்ந்திருப்பதேயாம். குளிர்ந்த நேரங்களில் (முக்கியமாகக் குளிர் காலங்களில்) வலது தோளும், இடது கையும் மறைக்கப்பட்டுப்போய்ப் போர்க்க முடியாதவைகளாகித் திறந்து வைக்கப்படுகின்றன. பிறகு சிலநேரங்கழிக்க, அந்த இரண்டு பிரதேசங்களிலும் வலியும் இசிவும் உண்டாயிருப்பதாக உணர்ந்துகொள்ளுகிறார்கள். அவ்வுணர்ச்சியைத்தரும் குறிதான் ஆமவாதம் என்னும் வியாதிக்கு ஸம்பந்தப்பட்டதாக இருக்கிறது. கையின் உட்புறத்திலுள்ள நரம்புகளினூடே அவ்வலி பரவியிருப்பதாகவும், முக்கியமாய்க் கையின் பூட்டுகளுக்கு எதிரில் அவ்வித நோய் ஏற்பட்டிருப்பதாகவும் உணரப்படும். நரம்பைப்பற்றியும் பூட்டுகளைப் பற்றியும் இரண்டு விதங்களாக இந்த நோய் ஸம்பவிக்கும். சில கேஸ்களில் மாம்சபேசிகள் இதனால் க்ஷயமடைவதும் உண்டு. தோளின் பூட்டில் இந்த நோயால் கிரமமாக வீக்கமும் வலியும் விருத்தியாகக்கூடும். கையைத் தூக்கவும் அசைக்கவும் சக்தி குறைந்துவிடும். இப்படிப்பட்டவன் இவ்வழக்கத்தை விட்டுவிட்டால் கிரமமாக இவ்விகாரங்கள் குறைந்துவிடும். ஆனால், பெரும்பாலும் இதன் காரணம் இன்னதென்று யோசிக்காமலே அவ்விதம் படிக்கும் துரப்பியாஸத்தை மேற்கொள்ளுகின்றனர். தோளைக் குளிருக்கு வெளிப்படையாகக் காட்டாமல் படித்தால் கெடுதல் உண்டாவதில்லையென்று தெரியவருகிறது. இவ்வலியுண்டானால் சூடான ஒற்றடங்களாலும் பலமாகப் பிடிப்பதனாலும் சிறிது நிவர்த்தியுண்டாவதுண்டு. படுத்தபடியே படிப்பது முதலில் ஸௌகரியமாகத் தோற்றியபோதிலும், அதனால் அடுத்தாற்போல் இந்தத்தீங்கு ஸம்பவிப்பதால், படுக்கையில் படுத்துக்கொண்டே படிக்கும் வழக்கத்தை விட்டுவிடவேண்டும்.

## ஸ்திரீகளின் நிலைமை.

சென்ற டிஸம்பர்மாதம் கல்கத்தாவில் கூடிய ஆசாரதிருத்தக் கான்பரென்ஸில் டாக்டர் பிரபல சந்திர ரே அக்கிராஸனம் வகித்து ஸ்திரீகளின் தற்போதைய நிலைமையைப்பற்றிச் சில விஷயங்களைக் குறிப்பிட்டார். அவற்றின் முக்கிய அம்சங்களை இங்கு எழுதுவோம்.

“இந்த ஸமூகத்தில் ஸ்திரீகளின் நிலைமையானது மிகுந்த கேவலமான ஸ்திதியிலிருக்கின்றது. ஸ்திரீகளின் அறியாமைக்கும் கீழ்மைத்தனத்துக்கும் நாமே ஜவாப்தாரியாவோம். கிணற்றுத் தவளைகளைப்போல் ஸ்திரீகள் வெளியே புறப்படுவதில்லை. அவர்களுக்கு உலக விஷயங்களை அறிவதற்கு வழியில்லை. அவர்களை முன்னுக்குத் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணம் நமக்குக் கொஞ்சமும் கிடையாது. அநேக குருட்டு நம்பிக்கைகள் நம் வீடுகளில் குடிகொண்டிருக்கின்றன. எதிர்ஜாமீன் வாங்

குள் வழக்கமானது பல குடும்பங்களை நாசத்துக்குள்ளாக்கி வருகின்றது. தேசமுன்னேற்றத்திற்காகப் பாடுபடும் உங்களில் எத்தனைபேர் எதிர்ஜாமீன் இல்லாமல் விவாகம் செய்திருக்கிறீர்கள். பழையகாலத்தில் ஸ்திரீகளுக்கிருந்த மேன்மையான அந்தஸ்தைக் கவனியுங்கள். இப்போது ஸ்திரீகளின் அஞ்ஞானத்தைப் போக்கி அவர்களுக்குப் படிப்புவசதிகளைச் செய்துகொடுங்கள்."

மேற்கூறியவாறு டாக்டர் சந்திரா ரே குறிப்பிட்டிருப்பதைப் பலரும் கவனிக்கத்தக்கது. ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமாயின், அத்தேசத்து ஸ்திரீகளின் அஞ்ஞானம் ஒழிக்சப்படவேண்டும். தேச அபிவிருத்தியைக் கோரும் நமது சகோதரர்கள் ஸ்திரீகளின் தற்காலத்திய நிலைமையைக் கவனித்து, அவர்களின் முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

### ஒரு பெரிய இரும்புப்பெட்டி.

அமெரிக்காவில் நியூயார்க் என்னும் பட்டணத்திலுள்ள ஒரு கம்பெனிக்காக, உலகத்திலுள்ள இரும்புப்பெட்டிகளுக்கெல்லாம் மிகப் பெரியதான ஒன்று செய்யப்பட்டிருக்கிறதாம். இதன் கதவுகள் ஒவ்வொன்றும் 40 டன் நிறையுள்ளது; 3 அங்குலம் கனம் உள்ளது. இந்தப்பெட்டியில் 900 கோடி ரூபாய் வைத்துப் பூட்டியிருக்கிறார்களாம். இதன் பூட்டுகள் மிகவும் சிக்கலான வேலைப்பாடுள்ளவையாயிருப்பதால், இரண்டு பேராய்ச் சேர்ந்துதான் பூட்டுக்களைத் திறக்கவாவது பூட்டவாவது கூடுமாம்.

### ஹைதராபாத்தில் கல்வியின் முற்போக்கு.

ஹைதராபாத்தில் கல்விக்காகச் செலவழிக்கப்படும் தொகையானது சென்ற முப்பது வருஷங்களுக்குள் கீழ்க்கண்டவாறு அதிகப்பட்டிருக்கின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1886 | ... | ... | ரூபா | 290,808 |
| 1896 | ... | ... | ,, | 684,367 |
| 1906 | ... | ... | ,, | 736,500 |
| 1916 | ... | ... | ,, | 1,322,210 |

---

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[குகப்பெருமாள்:—பண்டித பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் எழுதியது; வேலூர் வி. என். சாமராவ் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணா 3]

இந்நூலை இயற்றியவர் வேலூர் வூர்ஹீஸ் காலெஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும், தமிழில் செய்யுள் நடையிலும், வசன நடையிலும் பல நூல்களை இயற்றிப் பேர்பெற்றவருமாகிய மிஸ்டர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரவர். இது ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் கங்கைப்படலம், குகப்படலம் என்னும் பாகங்களில் காணப்படும் இனிய சரித்திரமாகும். இதில் ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரோடும் இலக்ஷ்மணனோடும் பித்ருவாக்கிய மாதருவாக்கிய பரிபாலனத்தின் பொருட்டு அயோத்திநகரம் நீங்கிக்கங்கைக்கரையை அடைந்தவளவில் இனிய குணமுடையவனாகிய குகன் என்னும் வேடர்தலைவன் அவரைச் சந்தித்து சேவிக்கதும் ஸ்ரீராமன் அவனை அன்புடன் ஏற்றுத் தோழனென்றும் சகோதரனென்றும் பாராட்டி அன்புகூர்ந்ததும், ஸ்ரீராமபிரானைக்காணப் பரிவாரத்துடன் வந்த பரதனை அக்குகன் இராமனிடத்துக்கொண்ட கனிந்த அன்பினால் மாறாகக் கருதிப் போர்க்குச் சித்தனானதும், பின்பு அவன் பரதனை உள்ளபடி அறிந்துகொண்டு மனமுருகியதும் ஆகிய பல விஷயங்கள் வெகு சாதுரியமாக எழுதப்பட்டிருக்கின்றன. மற்றும், இந்நூலானது நற்குணமுடைமையே உயர்ந்த சாதிக்கு லக்ஷணமென்பதையும், அஃதின்மையே கீழ்ச்சாதிக்கு லக்ஷணமென்பதையும், மற்றைப்படி பிறப்பினால் சாதியென்பது சரியன்றென்பதையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றது. தெள்ளிய வசனநடையில் இந்நூல் இயற்றப்பட்டிருப்பதால், இதை சிறுவர் சிறுமியர் ஆகி எல்லோரும் படிக்க வேண்டுமென்பதை நாம் வற்புறுத்துவோம்.